
விகடன் பிரசுரம்

# சகாயம் சந்தித்த சவால்கள்!

தடைகளைத் தாண்டி
ஊழல் வேரறுத்த வரலாறு



**கே.ராஜாதிருவேங்கடம்**

# சகாயம் சந்தித்த சவால்கள்

தடைகளைத் தாண்டி
ஊழல் வேரறுத்த வரலாறு

**கே.ராஜாதிருவேங்கடம்**

விகடன்
பிரசுரம்

Title :

SAGAYAM SANTHITHA SAVALGAL

© K.RAJA THIRUVENGADAM

ISBN: 978-81-8476-558-8

விகடன் பிரசுரம்: 792

நூல் தலைப்பு:

சகாயம் சந்தித்த சவால்கள்

நூல் ஆசிரியர்:

© கே.ராஜாதிருவேங்கடம்

அட்டைப்படம்:

ப.சரவணகுமார்

முதல் பதிப்பு : டிசம்பர், 2013

விலை : ₹ 80

பதிப்பாளர்:

பா.சீனிவாசன்

முதன்மை உதவி ஆசிரியர்:

ஆ.அன்பழகன்

முதன்மை வடிவமைப்பு:

மு.ராம்குமார்

வடிவமைப்பு:

ப.ஷங்கர்

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துபூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அகல மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமை சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளது. புத்தக விமர்சனத்துக்கு மட்டும் இந்தப் புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்ட அனுமதிக்கப்படுகிறது.

விகடன் பிரசுரம்

757, அண்ணா சாலை, சென்னை-600 002.

எடிட்டோரியல் பிரிவு போன்: 044-28524074 / 84

விற்பனை பிரிவு போன்: 044-42634283 / 84

e-mail: books@vikatan.com

## பதிப் ரை

'லஞ்சம் தவிர்த்து நெஞ்சம் நிமிர்த்து' - இந்தச் சொற்களை எங்கே கேட்டாலும் ஒரு முகம் உங்கள் மனக்கண் முன்வந்து நிற்கும். அவர்தான் சகாயம். ஊழல், முறைகேடு, விதி மீறல்கள் செய்பவர்களுக்கு எப்போதும் அவர் சுக்குக் கஷாயம் போல் கசக்கக் கூடியவர். அதிகார வர்க்கத்தின் எந்தப் பதவியில் இருந்தாலும் தன்னுடைய கற்பைக் காப்பாற்றிக்கொண்டு இருக்கக்கூடிய ஒரு சில அதிகாரிகளில் சகாயமும் ஒருவர். அதிலும் குறிப்பிடத்தகுந்தவர். பல அதிகாரிகள் தன்னளவில் நேர்மையாளர்களாக இருந்தால் போதும் என்று நினைப்பார்கள். ஆனால், சகாயம், அதைவிட முக்கியமாக தன்னைச் சுற்றி உள்ளவர்களையும் நேர்மையானவர்களாக மாற்றும் பிரசாரத்தையும் தொடர்ந்து செய்துவருபவர். அப்படிப்பட்ட சகாயம், தனது பணிக் காலத்தில் சந்தித்த சவால்களின் தொகுப் முதன்முதலாக த்தகமாக வருகிறது.


'பொது ஊழியர் ஒருவர் தன்னால் செய்யப்பட வேண்டிய அதிகாரப்பூர்வமான வேலைக்குச் சட்டப்படி பெற வேண்டிய ஊதியத்தைத் தவிரக் கைகூலி பெறுவதையே - லஞ்சம்' என்று வரையறை செய்கிறது அரசியலமைப் ச் சட்டம். லஞ்சம் வாங்கிய அரசு ஊழியர் கைது செய்யப்பட்டார் என்ற செய்தி இல்லாமல் தினசரி செய்தித்தாள்கள் வருவது இல்லை. லஞ்சம் வாங்காத நேர்மையான அதிகாரி ஓர் அலுவலகத்துக்கு ஒருவர் இருந்தாலே அது ஆச்சர்யமாகப் பேசப்படுகிறது. அப்படிப்பட்ட ஆச்சர்யம் தரும் மனிதர்களில் முதன்மையானவர் சகாயம்!

'என் அரசுப் பணியில் எங்காவது ஓர் இடத்தில் ஒரு சிறு ஊழல் செய்து இருந்தாலோ, ஒரு ரூபாய் லஞ்சம் வாங்கி இருந்தாலோ, பொதுமக்கள் முன்னிலையில் என்னைத் தூக்கில் போடலாம்' என்று முதலமைச்சருக்கு கடிதம் எழுதும் தைரியம் எந்த அதிகாரிக்கு இருக்கிறது? அப்படியொரு நேர்மையாளருக்கு மகுடம் சூட்டுகிறது இந்த நூல்.

சகாயம் கடந்து வந்த முள் பாதைகளையும், அவர் பணியில் சந்தித்த அனுபவங்களையும் பத்திரிகையாளர் கே.ராஜாதிருவேங்கடம் அழகான நடையில் தந்திருக்கிறார்.

சாக்கடைச் சமூகத்தில் அதைச் சுத்தப்படுத்துவர் அனுபவிக்கும் கஷ்டத்துடனேயே சகாயம் போன்றவர்களின் பயணமும் இருக்கிறது. ஊழல் இல்லாத சமுதாயம் படைக்கவும் ஊழலை எதிர்த்துப் போராடவும் ஊக்க சக்தியாக இந்தப் த்தகம் அமையும்!

## 'எல்லோரும் சகாயமாக மாற வேண்டும்!'



இந்தியாவின் நிர்வாக அமைப் ஒரு காலத்தில் செயல் திறத்திலும் நேர்மையிலும் உலகப் கழ்பெற்றதாக இருந்தது. ஆகையினால்தான், ஆங்கிலேயர்கள் இந்தியாவை ஆண்ட காலத்தில், மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, சர்தார் பட்டேல், ராஜாஜி, காமராஜர், சத்தியமூர்த்தி போன்ற மாபெரும் வீரர்கள் ஐ.சி.எஸ்-ஸைச் சார்ந்த உயர்மட்ட அதிகாரிகளின் சுதந்திரப் போராட்டத்துக்கு எதிரான பல அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு இலக்காகியிருந்தும், சர்தார் பட்டேல் நாட்டின் ஒற்றுமையைப் பாதுகாக்கவும் முன்னேற்றத்துக்கு வழிவகுக்கவும் ஐ.சி.எஸ். போன்று அகில இந்திய அளவில் ஓர் ஆட்சிப் பணி இருந்தாகவேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். அதற்கு வந்த எதிர்ப் கள் கொஞ்சநஞ்சமல்ல. எதிர்த்தவர்களை எல்லாம் தன்னுடைய வாதங்களினால் வயப்படுத்தி, ஐ.ஏ.எஸ். என்ற பெயரில் அரசியல் சாசனத்தின் ஓர் அம்சமாக அதைச் சேர்த்தும்விட்டார்.

எதிர்த்தவர்களைச் சமாதானப்படுத்த அவர் வைத்த வாதங்களிலேயே அவருடைய எதிர்பார்ப் களையும் அவர் தெள்ளத் தெளிவாகக் குறிப்பிட்டார். கொள்கைகள் வகுப்பதிலும் திட்டங்கள் தீட்டுவதிலும் அவற்றைச் செயலாற்றி மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதிலும் விருப் வெறுப்பின்றி, நெஞ்சில் உரத்துடனும், நேர்மைத் திறத்துடனும், அமைச்சர்களுக்கு அறிவுரை பகன்று, அகில இந்திய உணர்வோடு இயங்கி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மைய, மாநில அரசுகளுக்குப் பக்கபலமாக நின்று ஜனநாயகத்தை வலுப்படுத்தும் ஒரு சாதனமாக ஐ.ஏ.எஸ்.

திகழும் என்பதுதான் அந்த வாதங்களின் சுருக்கம்.

அந்த எதிர்பார்ப் களின்படியே ஐ.ஏ.எஸ். நடந்துகொண்டிருந்தால் இந்த நூலுக்கே அவசியம் இருந்திருக்காது. ஏனென்றால், இந்திய ஆட்சிப்பணியில் இருப்பவர்கள் எல்லோருமே சகாயங்களாக இருப்பார்கள். சகாயத்தைப் போலவே ஒரு மாநிலம் முழுவதும் பொறுப் உணர்ச்சிக்கும் நாணயத்துக்கும் மக்களிடம் பரிவுடனும், பாசத்துடனும், தொண்டு மனப்பான்மையுடனும் பழகுவதற்கும் முன்னுதாரணமாக எல்லா அதிகாரிகளும் மக்கள் மனதில் இடம் பெற்றிருப்பார்கள்.

தமிழ்நாடு ஊழலில் Transparency International என்ற நடுநிலையான ஒரு உலக நிறுவனத்தின் கணிப்பில் இரண்டாவதாக வரிசைப்படுத்தப்பட்டிருக்கும் அவல நிலை வந்திருக்காது. என் பணிக் காலத்தில் நான் இந்தியாவின் எல்லா மாநிலங்களுக்கும் போயிருக்கிறேன். அங்குள்ள நிர்வாகங்களின் தரத்தை ஒப்பிட்டு எடைபோடும் வாய்ப் ம் எனக்குக் கிடைத்திருக்கிறது. மெத்தனத்திலும் மக்களிடம் பண்பின்றி நடந்துகொள்வதிலும் பரிவின்மையிலும் தமிழ்நாட்டு நிர்வாகம் ஈரமற்ற இயந்திரமாக செயல்படுகிறது என்பது என் கணிப் .

பத்திரிகையாளர் கே.ராஜாதிருவேங்கடம் மிகவும் அழகான நடையில் தொகுத்து அளித்துள்ள சகாயத்தின் பணி அனுபவங்கள் மற்றும் அணுகுமுறைகளைப் படிப்பதன் மூலமாகவாவது எல்லாருமே சகாயங்களாக மாறினால் சந்தோஷம்தான்!

– பி.எஸ்.ராகவன்,

இந்திய ஆட்சிப்பணி ( ஓய்வு)

கொள்கை ஆலோசகர் - முன்னாள் ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் வேளாண் நிறுவனம்,

முன்னாள் தலைமைச் செயலர் - திரி ரா.

# சகாயம் ஒரு சகாப்தம்!

ஆட்சிப் பணி என்பது சாதாரண விஷயமல்ல. அரசாங்கத் திட்டங்களை மக்களுக்குக் கொண்டு சேர்ப்பதும், மக்கள் பிரச்னைகளை அரசின் கவனத்துக்கு எடுத்துச் செல்வதும் அதிகாரிகள்தான். மக்களுக்கும் அரசுக்கும் இடையில் பாலமாக இருக்கும் அதிகாரிகள் சரியாக இருந்தால் எல்லாமே சரியாக இருக்கும். ஆனால் இப்போது அப்படி இருக்கிறதா?

அரசின் திட்டங்கள் மக்களுக்கு வந்து சேருவதற்குள் எத்தனை இடையூறுகள்... எத்தனை இடைத்தரகர்கள். அரசு அலுவலகம் ஒன்றில் சாமானிய மனிதனால் கையூட்டு எதுவும் கொடுக்காமல் ஒரு சான்றிதழ் வாங்கிவிட முடியுமா? லஞ்சமும், ஊழலும் நம் நாட்டில் அடிமட்டத்தில் இருந்து மேல்மட்டம் வரை எப்படியெல்லாம் ரையோடியிருக்கிறது என்பதை நிச்சயம் எதாவது ஒரு சந்தர்ப்பத்தில் நீங்களும் உணர்ந்திருப்பீர்கள். லஞ்சமும், ஊழலும் இல்லாத இந்திய நாட்டைப் பார்க்க முடியாதா என்ற ஏக்கம் நம் ஒவ்வொருவருக்குள்ளும் உண்டு.

'லஞ்சமும் ஊழலும் இன்று சாதாரண பொருளாதாரப் பிரச்னையாக மட்டும் அல்ல. லஞ்சம் என்பது அடிப்படையில் ஏழைகளுக்கும், நாட்டுக்கும், மானுடப் பண் க்கும் எதிரானதாக உள்ளது. அதனால் லஞ்சமும் ஊழலும் எல்லா நிலைகளிலும் முற்றிலும் அகற்றப்பட வேண்டும்' என்பதில் உறுதியாக இருக்கிறார் சகாயம் ஐ.ஏ.எஸ். அரசுப் பணியை தொடங்கிய நாள் முதல் இன்று வரை தான் ஏற்றுக்கொண்ட நேர்மையில் இருந்து நூல் அளவும் தடம் மாறாமல் சகாயத்தின் பயணம் தொடகிறது.

எளியவர்களுக்குத் தோள் கொடுக்கும் மக்கள் நண்பன். சமரசங்களுக்கு உட்படாத நேர்மையாளர். விவசாயிகளின் குறை தீர்க்கும் கூட்டம் என்றால் சகாயம் ஒரு விவசாயியாகவே மாறிவிடுவார். ஏழை மக்களிடம் பேசும்போது கலெக்டர் என்ற தோரணை இருக்காது. அவர்களின் குடும்பத்தில் ஒருவராகத்தான் பேசுவார். பள்ளிக்கூடங்களில் குழந்தைகளிடம் கலந்துரையாடும் போது அங்கே இவரும் ஒரு குழந்தையாகத்தான் இருப்பார். தன் பணியினால் மக்களுக்கு எதாவது நல்லது செய்ய முடியும் என்றால் அதில் முதல் ஆளாக சகாயம் நிற்பார். நேர்மை என்று

வந்தால் சகாயம் நெருப்பாக இருப்பார். மொத்தத்தில் சகாயம் ஒரு சகாப்தம்!

'உங்களைப் பற்றி ஒரு த்தகம் கொண்டுவரப் போகிறோம்' என்று சகாயம் அவர்களிடம் நான் சொன்னபோது, 'இந்தப் த்தகம் வந்தால் எனக்கு இன்னும் நான்கு எதிரிகள் அதிகமாவாங்க. பரவாயில்லையா... பார்த்துக்கோங்க!' என்று சொல்லிச் சிரித்தார்.

வாழ்க்கையில் பலருடன் பேசுவோம். சிலருடன் பழகுவோம். அதில் ஒரு சிலரை மட்டும்தான் பின்தொடர்வோம். அப்படி என்னைப் பின்தொடர வைத்தவர் சகாயம். அரசு பணியில் சகாயம் சந்தித்த சவால்களை ஒரு பத்திரிகையாளராக நான் பல வருடங்களாகக் கவனித்து வருகிறேன். அவற்றின் தொகுப்பே இந்த நூல்.

இந்த தொகுப் க்கு எனக்கு பெரிதும் உதவியாக இருந்த என் இனிய தோழமை வளர்மதிக்கு நன்றி.

மேலும் எழுத்துலகில் நான் பிரவேசிக்க காரணமாக இருந்த அத்தனை பேருக்கும் என் நன்றிகளைச் சொல்லிக்கொண்டே இருப்பேன்.

நன்றி!

- கே.ராஜாதிருவேங்கடம்
krajathiru@gmail.com



# கே.ராஜாதிருவேங்கடம்

சேலம் மாவட்டம் ஜலகண்ட ரம் அருகே உள்ள காப்பரத்தாம்பட்டி என்ற கிராமத்தைச் சேர்ந்தவர். இவரது பெற்றோர் கண்ணன் - ஜெயா.


பரமத்தி வேலூர் கந்தசாமிக் கண்டர் கல்லூரியில் படித்த காலத்தில் விகடன் மாணவப் பத்திரிகையாளர் திட்டத்தில் தேர்வானார். அத்திட்டத்தில் பணி ரிந்த காலத்தில் மிகச் சிறந்த மாணவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். சமூக அவலங்களுக்கு எதிராகத் தொடர்ந்து எழுதிவரும் பத்திரிகையாளர்.

'கொல்லிமலை சித்தர்கள்' விகடன் பிரசுரத்தில் வெளியான இவரது முதல் நூல்.

தற்போது ஜூனியர் விகடனில் பொறுப்பாசிரியராகப் பணி ரிகிறார்.

இந்த நூல்...

எங்கள் எண்ணங்களில் கலந்து
நினைவுகளில் வாழும்
நேர்மையான பத்திரிகையாளர்
ஏ.சசிகுமாருக்கு...



# உள்ளே...


1. லஞ்சம் தவிர்த்து... நெஞ்சம் நிமிர்த்து!
2. கண்டிப்பா நீ கலெக்டரா வருவே..!'
3. வாழ்க்கையின் வரம்!
4. ஆண்டவன் வைத்த சோதனை!
5. ஆக்ஷன் ஆரம்பம்!
6. தர்ம யுத்தம்!
7. சுபாஷ் சந்திரபோஸ்... காமராஜர்.. விஜய்!
8. நிஜமான சந்தோஷம்!
9. தப் க் கணக்கு!
10. ஒன் மேன் ஆர்மி சகாயம்!
11. 'நெஞ்சமுண்டு நேர்மையுண்டு'
12. சவாலே சமாளி!
13. தமிழ் வளர்க்கும் அரசுப் பள்ளிகள்!
14. நீங்களும் ஐ.ஏ.எஸ். ஆகலாம்!
15. தலைமுறை கடந்த வருத்தம்!
16. பதவியும் உதவியும்!

1

# லஞ்சம் தவிர்த்து... நெஞ்சம் நிமிர்த்து!

ஒரு மாலை நேரம்...

காற்றும் மழையும் அடித்து ஓய்ந்திருந்தது. மழை விடுவதற்கும் பள்ளிக்கூடம் முடிவதற்கும் சரியாக இருந்தது. 'ஹே...'வென கத்தியபடி அந்த ஆரம்பப் பள்ளியில் இருந்து சிறுவர்கள் சிட்டாகப் பறந்தனர். பள்ளிக்கூடத்தில் இருந்து பக்கத்து கிராமத்துக்குப் போகும் வழிநெடுக மாந்தோப் கள் நிறைந்திருக்கும். சுழற்றி வீசிய சூறாவளிக் காற்றில் மாந்தோப்பில் மாங்காய்ப் பிஞ்சுகள் சிதறிக்கிடந்தன. மந்தக்கொள்ளை தோப்பிலும் மாங்காய்ப் பிஞ்சுகள் நிறையவே சிதறிக்கிடந்தன.

பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டை நோக்கி ஓடிக்கொண்டிருந்த அந்தச் சிறுவனுக்கு மாங்காய்ப் பிஞ்சைப் பார்த்ததும் மனம் பிரேக் போட்டது. செட்டியார் தோப்பில் இருந்து இரண்டு மாங்காய்ப் பிஞ்சுகளை எடுத்துப் பைக்குள் போட, 'யாருடா அது...' - தடியுடன் நின்றிருந்த காவல்காரன் ஓடி வந்தான். சிறுவன் எடுத்தான் ஓட்டம். வீட்டுக்குப் போனதும் அந்த சிறுவன் தான் எடுத்து வந்த மாங்காயை அம்மாவிடம் காட்டி சந்தோஷப்பட்டான்.

"ஏதுடா மாங்காய்...?" -சிறுவனின் அம்மா குரலை உயர்த்திக் கேட்டார்.

"செட்டியார் தோப் ல இருந்து எடுத்துட்டு வந்தேம்மா... காவக்காரன் துரத்தினான். என்னைப் பிடிக்கவே முடியலை தெரியுமா?" - பெருமையோடு சொன்னான்.

"நீ செஞ்சது தப் டா... இந்த மாங்காயை எங்கே எடுத்தியோ அங்கேயே கொண்டுபோய் போட்டுட்டு வந்துடு.." - அம்மா கடுமையுடன் சொன்னார்.

"ஏம்மா அப்படி சொல்ற?" -சிறுவன் கேட்டான்.

"இந்த மாங்காய் நமக்கு சொந்தமானது இல்ல. அடுத்தவங்களுக்கு சொந்தமான பொருளை நாம கேட்காம

எடுக்குறது தப் . கேட்டே வாங்கினாலும் அது தப் தான்! ரிஞ்சுதா" - என்று அந்த அம்மா சொல்ல... ரிந்தவனாகத் தலையாட்டிவிட்டு செட்டியார் தோப் க்குப் போனான் அந்த சிறுவன். எடுத்த மாங்காயை காவல்காரனிடம் திருப்பிக்கொடுத்தான்.

"போய் சாப்பிடு தம்பி..." என்று காவல்காரன் எவ்வளவோ சொல்லியும் மாங்காயை திருப்பிக்கொடுத்துவிட்டு திரும்பிப் பார்க்காமல் நடந்தான் அந்த சிறுவன். இது நடந்தது அந்த சிறுவன் நான்காம் வகுப் ப் படிக்கும்போது! இப்போது அந்த சிறுவன் நாற்பத்தி ஐந்து வயதைக் கடந்துவிட்டார். அம்மா சொல்லிக்கொடுத்த பாடம் இன்னும் அவர் நெஞ்சில் இருந்து அகலவில்லை. அந்த சிறுவன் வேறு யாருமல்ல... இன்று நேர்மைக்கு இன்னொரு பெயராக ஊரெங்கும் உச்சரிக்கப்படும் சகாயம் ஐ.ஏ.எஸ்.தான்!

"ஆங்கில நாட்டின் பிரதம அமைச்சராக விளங்கிய சர்.ராபர்ட் வால்போல் 'All those men have their price' என்று ஆட்சியாளர்களைப் பார்த்து நேர்மையற்றவர்கள் என்ற பொருளில் குறிப்பிட்டதை பொய்யாக்க விரும்பினேன். விளைவு, என் பணிக் காலத்தின் தொடக்கம் முதலே லஞ்சத்துக்கு எதிரான தீவிர நிலைப்பாட்டை நான் எடுத்து வந்திருக்கிறேன். அதைப்போல என் கீழ் பணியாற்றும் ஊழியர்களில் அபூர்வமான நேர்மையாளர்களையும் நான் சந்தித்திருக்கிறேன். அப்படி இருந்தாலும், என் கீழ் பணியாற்றுபவர்களில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் லஞ்சப் கார்களுக்கு இடம் கொடுப்பவர்களாக இருந்தனர். அவர்கள் மீது லஞ்சப் கார்கள் வருகின்ற போதெல்லாம் கண்டிக்கவும், தண்டிக்கவும் நான் ஒருகாலும் தயங்கியதில்லை.

ஆனாலும், இந்த லஞ்ச சீர்கேடு தொடர்கதையாக இருந்து தொல்லை தந்தது என்பதுதான் உண்மை. லஞ்சத்தைப் பொறுத்தவரைக்கும் நான் உறுதியாக, அது ஏழைகளின் முன்னேற்றத்துக்கு எதிரானது; நாட்டின் வளர்ச்சிக்கு கேட்டினைத் தருவது; மானுட பண்பாட்டுக்கு மாறானது என நம் கிறேன். லஞ்சம் பெறுவது என்பது ஏதோ ஒரு பொருளாதாரத் தேவையைப் பூர்த்தி செய்திடும் வழி என்று சிலர் கருதலாம். ஆனால், லஞ்சம் பெறக்கூடிய அரசு ஊழியர் ஒருவர் மிக அரிய மனித மாண்பான சுயமரியாதையை - தன்மானத்தை இழக்கிறார். அவரிடத்திலிருந்து இயல்பான மனிதாபிமானம் கொஞ்சமாகக் குறைகிறது.

மொத்தமாக மறைகிறது. இது எனக்கு வருத்தத்தை அளிக்கக்கூடிய ஒன்று.

சட்டத்தை கம்பீரமாக அமல்படுத்த வேண்டிய அதிகார மிக்க அலுவலர்கள் லஞ்சத்தால் கோழைத்தனமாக குறுகிப் போவது என் மனதை பாதிக்கிறது. எனவே, எனக்கு கீழே பணியாற்றுகின்ற அலுவலர்களை தன்மானம் மிக்கவர்களாக, மனிதாபிமானம் கொண்டவர்களாக மாற்றிட வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன்.

'தத்துவங்களே ஆட்சிக்கு அடித்தளம் வகுக்கிறது' என்கிற கிரேக்க நாட்டின் சீரிய சிந்தனையாளன் பிளேட்டோவின் கூற்றுக்கு ஒப்ப, 'வார்த்தைகளே வரலாற்றை உருவாக்குகின்றன' என்ற உண்மையை உணர்ந்த நான் 'லஞ்சம் தவிர்த்து நெஞ்சம் நிமிர்த்து' என்ற சொற்றொடரை நிர்வாகத் தாரக மந்திரமாக, நேர்மைப் ரட்சிக்கு அடிப்படையாக, அடையாளமாக - என்னுடைய அலுவலகத்தில் மட்டுமல்ல, எல்லா அலுவலகங்களிலும் - எழுதச் சொல்லிப் பின்பற்ற அறிவுறுத்தினேன்.

நான் ஏதோ அதிரடியாகச் செய்ய வேண்டும் என்பதற்காக நேர்மையாக இருக்கிறேன் என்று நினைத்துவிட வேண்டாம். இந்த சமூகத்தை ஆழமாக நேசிப்பதும், சமூக அவலங்களை அறுத்து எறிகின்ற ஆவேசமும், நிகரற்ற நீதி உணர்வும் நெடுங்கால நேர்மையும் இல்லாமல் இந்த நிகழ்வுகள் சாத்தியமில்லை. அடிப் படையில் நேர்மை இல்லாத எவரும் எந்த அதிரடி நடவடிக்கைகள் மூலமாகவும் தங்களை நீண்ட காலம் நிலை நிறுத்திக்கொள்ள முடியாது என்பதுதான் உண்மை. அதே நேரத்தில் தந்தை பெரியாரின் வார்த்தைகளை நினைவு படுத்த விரும் கிறேன். அவர் சொல்வார், 'ஒரு லட்சம் ரூபாயை என்னிடம் கொடுத்துவிடுங்கள் ஒரு மகா அயோக்கியனை யோக்கிய னாக இந்த சமூகத்தில் விளம்பரப்படுத்தி பிரபலப் படுத்திக் காட்டுகிறேன்' என்று. பணமிருந்தால் எவரும் இந்த சமூகத்தில் பிரபலப்படுத்திக்கொள்ள முடியும். என்னிடத்தில் இருப்பது சத்தியமும், நீதியும் இந்த சமூகத்துக்குமான உண்மையான பரிவும்" என்று சொல்கிறார் சகாயம்.



சகாயத்தின் அம்மா

இப்படியும் ஓர் அதிகாரி இருப்பாரா என்று உங்களைப் போலவே எனக்கும் ஆரம்பத்தில் ஆச்சர்யமாக இருந்தது. அந்த ஆச்சர்யம்தான் என்னை, அவரைப் பின்தொடர வைத்தது. பல்வேறு காலகட்டங்களில் ஒரு பத்திரிகையாளராக சகாயத்துடன் நெருங்கிப் பழகும் வாய்ப் எனக்குக் கிடைத்தது. அந்தச் சமயங்களில் அவர், அவரது அரசு பணிகளில் நடந்த சுவாரஸ்யமான அனுபவங்களை என்னுடன் பகிர்ந்துள்ளார். அதில் பல விஷயங்களை அந்தந்தக் காலகட்டத்தில் விகடன் குழும இதழ்களில் நான் பதிவு செய்திருக்கிறேன். சிலவற்றை என் மனதுக்குள் மட்டும் பதிவுசெய்து வைத்திருந்தேன். அவற்றின் தொகுப்பே இந்த நூல்.




நேர்மையை நேசிக்கும் அத்தனை பேருக்கும் இந்த நூல் வாசிக்கப் பிடிக்கும்.

# கண்டிப்பா நீ கலெக்டரா வருவே..!'

சொந்த ஊர் என்றால் யாருக்குதான் பிடிக்காது. சகாயத்திடம் அவரது சொந்த ஊரைப் பற்றிக் கேட்டால், சின்னக் குழந்தையாகவே மாறிவிடுவார்.

" துக்கோட்டைக்கு பக்கத்துல இருக்குற பெருஞ்சுனைங்குற குக்கிராமம்தான் எங்களோடது. ரொம்பச் சின்ன ஊரு எங்க ஊரு. ஆனா, ஊர் பேருக்கு ஏத்தாப் ல ஒரு பெரிய சுனை, பெரிய குளம், பக்கத்துலேயே வரலாற்றுச் சிறப் மிக்க சித்தனவாசல் இருக்கிறது.

எங்க ஊருக்கு இந்தப் பெயர் வரக் காரணமே ஊருக்கு வெளியில இருக்குற சுனைதான். அந்தக் காலத்தில் எங்கே தண்ணி வத்திப்போனாலும் அந்தச் சுனையில மட்டும் தண்ணீர் தேங்கி நிற்கும். அதில்தான் குளிக்கிறது, துவைக்கிறது எல்லாமே. அந்தச் சுனையோட கரையில் ஒரு சிவன் கோயில் இருக்கு. அதுவும் பழமை வாய்ந்த கோயில். சுனையில குளிச்சிட்டு எல்லாருமே அந்தச் சாமியை கும்பிட்டுட்டுதான் போவாங்க. எங்க ஊருல ஒரு பெரிய குளம் இருக்கு. எந்த ஊருலயும் இவ்வளவு பெரிய குளத்தைப் பார்க்க முடியாது. நான் சின்னப் பிள்ளையா இருக்கிறப்போ அந்தக் குளத்துக்குக் குளிக்கப்போனா, அவ்வளவு சீக்கிரம் யாரும் திரும்ப வரவே மாட்டோம்.



பெற்றோருடன் சகாயம்

தண்ணிக்குள்ளே நாங்க நண்பர்கள் சேர்ந்து விளையாடுவோம். 20 மீட்டர் தூரத்துக்கு தண்ணிக்குள்ளே மூழ்கி நீச்சல் அடிச்சிட்டுப் போவோம். தண்ணியில இருந்து வெளியில தலை தெரிஞ்சா பசங்க பந்தால அடிப்பாங்க. மணிக் கணக்குல இந்த விளையாட்டு போகும். குளிக்கப்போன பையனைக் காணோமே என்று வீட்டுல இருந்து யாராவது வந்துதான் அழைச்சிக்கிட்டுப் போகணும்.

எங்க ஊரில் இருக்கும் மாதா கோயிலுக்கு எல்லா வீட்ல இருந்தும் வந்து மெழுகுவர்த்தி ஏத்தி, சாமி கும்பிடுவாங்க. அதே மாதிரி, எங்க ஊரு அய்யனார் கோயில்ல குதிரைத் திருவிழா ரொம்பப் பிரபலம். பக்கத்துல இருக்குற திரு வேங்கைவாசல்ல மண் குதிரை செய்வாங்க. அந்த ஊருக்குத் தாரை, தப்பட்டையோட போய் வீட்டுக்கு ரெண்டு குதிரையைத் தூக்கி வந்து அய்யனார் கோயிலுக்குக் காணிக்கை செலுத்துவாங்க.

அதே மாதிரி, எங்க ஊரு பிடாரி அம்மன் கோயில் திருவிழா. நாலு நாள் நடக்குற அந்தத் திருவிழாவுல நடக்கும் நாடகம் ரொம்பப் பிரமாதமா இருக்கும். 'வள்ளி திருமணம்', 'அரிச்சந்திரா

மயான காண்டம்', 'சத்தியவான் சாவித்திரி'னு நாளுக்கு ஒரு நாடகம் போடுவாங்க. நான் சின்னப் பிள்ளையா இருந்தப்ப எங்க அப்பா என்னை மல்லுக்கட்டி அந்தக் கோயிலுக்கு அழைச்சுட்டுப் போவாங்க. விடிய விடிய விழிச்சிருக்க வெச்சு நாடகம் முடிஞ்சதும் கூட்டி வருவாங்க. ஒவ்வொரு நாளும் கூட்டம் அலை மோதும். திருவிழா நாட்கள்ல அங்க சுக்குக் காபி விப்பாங்க. தூக்கம் வரும்போ தெல்லாம் அதுல ஒண்ணு வாங்கிக் குடிச்சா தூக்கம் எல்லாம் கலைஞ்சிடும். இன்னைக்கும் கிராமம் நெனைப் ல வந்தா, நாடகமும் சுக்குக் காபியும் நெனைப் க்கு வந்துடும். ஊரை நினைச்சாலே எப்போதும் சந்தோஷம்தான்.

கிராமத்துல எங்க நிலத்தை ஒட்டி கொஞ்சம் றம்போக்கு நிலம் இருந்தது. எங்க நிலத்தோடு அதையும் சேர்த்து உழுதாலும் யாரும் கேட்கப்போவது இல்லை. ஆனால் எங்க அப்பா வரப்பை மீறி ஒரு ஜாண்கூட சேர்த்து உழுதிருக்க மாட்டாங்க. பொதுச் சொத்தின் மீதும், பொதுவான பொருளின் மீது எப்போதும் ஆசைப்படக் கூடாதுங்குறதை என் மனசுல ரொம்பவே ஆழமாகப் பதிய வெச்ச விஷயங்கள் இவை.

எங்களுக்கு சொந்தமாக நில லன்கள் இருந்தாலும் தோட்டத்துல வேலை செய்ய அம்மா விடவே மாட்டாங்க. 'டேய் சகாயம் நீ படிச்சு பெரிய கலெக்டரா ஆகணும்டா... உதவின்னு கேட்டு வரவங்களுக்கெல்லாம் நீ உதவணும்டா. படிக்கிற வேலையை மட்டும் பாருன்'னு அடிக்கடி சொல்வாரு. கலெக்டர் படிப் ன்னா என்னா... அது எங்கே படிக்கணும் எந்த விவரமும் அப்போ எனக்குத் தெரியாது. நாம கலெக்டர் ஆகணும்னு அப்பா சொல்றாரு... கலெக்டர் ஆகியே தீரணும்னு அந்தச் சின்ன வயசுல மனசுக்குள்ள ஒரு எண்ணம் வந்துச்சு.


எல்லைப்பட்டி கிராமத்துல நாராயணசாமினு பெரிய வாத்தியார் ஒருத்தர் இருந்தார். என்னை எப்பப் பார்த்துப் பேசினாலும், 'நீ கலெக்டராயிடுப்பா'னு சொல்லிக்கிட்டே இருப்பாரு. ஏன்னா, நான் அந்த அளவுக்கு நல்லாப் படிப்பேன். படிப் முடிஞ்சதும் என்னோட ஆசிரியர் சொன்ன மாதிரியே நானும் கலெக்டர் ஆயிட்டேன். நேரா எங்க நாராயணசாமி சாரைப் பார்த்து, 'அய்யா நீங்க சொன்ன மாதிரி நான் கலெக்டர் ஆயிட்டேன்'னு சொல்லி கால்ல விழுந்து ஆசீர்வாதம் வாங்கிட்டு வந்தேன்"- சினேகிதமாகச் சிரிக்கிறார் சகாயம்.

உபகாரம் பிள்ளை - சவரியம்மாள் தம்பதியருக்கு ஐந்து ஆண்

பிள்ளைகள். அதில் கடைசி மகன்தான் சகாயம்.




"எனக்கு மூத்தவுங்க நாலு அண்ணங்க இருக்காங்க. நான்தான் வீட்டுக்குக் கடைக்குட்டி. அந்த சின்ன வயசுல என்னோட ரோல் மாடல் எங்க சித்தப்பா அருளாந்து பிள்ளைதான். எங்க அப்பாவோட கடைசி தம்பி அவர். எங்க ஊருக்குப் பக்கத்துல மூன்று குவாரியை கான்ட்ராக்ட் எடுத்திருந்தாரு. மூன்று லாரி வெச்சிருந்தாரு. அவருக்கு நில லன்களும் ஏராளம். அவரோட குவாரியில வேலை பார்த்தவங்களுக்கு கூலி ஒரு நாளைக்கு எட்டணா என்று இருந்தது. ஏழை மக்கள் கஷ்டப்படுறாங்க என்று அதை பத்து மடங்கு உயர்த்தி ஒரு நாளுக்கு ஐந்து ரூபாய் சம்பளம் கொடுத்தாரு. ஊரே எங்க சித்தப்பாவைப் பத்திதான் பேசுவாங்க. அவருக்கு 34 வயசா இருந்தபோது குவாரியில நடந்து போய்ட்டு இருந்தபோது கால் தடுமாறி கீழே விழுந்துட்டாரு. அதுல அடிபட்டதுல அவர் இறந்து விட்டார். ஆனாலும் அவர் ஏழைகளுக்கு செய்த உதவி என் மனசுல அப்படியே பதிஞ்சிடுச்சு. அவரைப் போலவே நாமும் ஏழைகளுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் சின்ன வயசுல இருந்தே இருந்தது.



ஒவ்வொரு மனுஷனும் வாழ்க்கையில எப்படியெல்லாம் இருக்க போறாங்குறதுக்கான விதை நிச்சயமா அவனோட சின்ன வயசுலயே விதைக்கப் படுது. எனக்கும் அப்படித்தான் விதைக்கப்பட்டது என்பதை நான் நிச்சயமாக நம் றேன்.

பள்ளிக்கூடப் படிப்பை முடிச்சபோதுதான் கலெக்டர் ஆகணும்னா என்ன படிக்கணும் என்ற விவரமே எனக்குத் தெரிஞ்சுது. துக்கோட்டை மன்னர் கல்லூரியில் பி.ஏ. வரலாறு சேர்ந்தேன். என்னோட எண்ணம் எல்லாமே கலெக்டர் என்பதில் மட்டும்தான் இருந்தது. மன்னர் கல்லூரியில படிக்கும்போது பாடப் த்தகங்கள் தாண்டி நிறையப் த்தகங்கள் படிக்கும் வாய்ப் கிடைச்சுது. அங்கே வரலாற்றுத் துறை பேராசிரியராக இருந்த வைத்தியநாதன் என்னைத் தொடர்ந்து ஊக்கப்படுத்தினார்.

மன்னர் கல்லூரியில் ஒவ்வொரு வருஷமும் தர்மராஜ பிள்ளை தங்கமெடல் பேச்சுப் போட்டி நடக்கும். அந்தப் போட்டியில் ஒரு முறை பரிசு பெற்றால் இரண்டாவது முறை தர மாட்டார்கள். எனக்குத் தொடர்ந்து இரண்டு முறை அந்த மெடல் கிடைத்தது. நாங்க தினமும் கலெக்டர் பங்களாவைத் தாண்டிதான் எங்க கல்லூரிக்குப் போகணும். கலெக்டர் பங்களா வாசல்ல 'கற்பூர சுந்தரபாண்டியன், ஐ.ஏ.எஸ்.' என்று பெயர்ப் பலகை இருக்கும். தினமும் அதை ஏக்கத்துடன் பார்த்தபடி என்னுடன் வரும் நண்பர்களிடம், 'அந்த போர்டுல சகாயம், ஐ.ஏ.எஸ். என்று இருந்தால் எவ்வளவு நல்லா இருக்கும்' என்று சொல்வேன். இப்படி நான் என்னதான் பேசினாலும், எழுதினாலும் என் எண்ணம் முழுக்க கலெக்டர் கனவில்தான் இருந்தது. அங்கே மூணு வருஷம் முடிச்ச கையோடு சென்னைக்குக் கிளம்பினேன்.

லயோலா கல்லூரியில் முதுகலை சமூகப் பணி படிச்சேன். லயோலா கல்லூரியில் நான் படிச்ச சமயத்தில் ஒருமுறை பீஸ் கட்டுவதற்காக வைத்திருந்த பணத்தில் த்தகம் வாங்கிவிட்டேன். பீஸ் கட்ட 400 ரூபாய் குறைவாக இருந்தது. அந்தக் காலத்தில் 400 ரூபாய் என்பது பெரிய தொகை. லயோலா கல்லூரியில் வருடம் தோறும் மச்சோடா அறக் கட்டளை கட்டுரைப் போட்டி நடக்கும். ஸ்பாட்டில்தான் தலைப் தருவார்கள். நானும் கட்டுரைப் போட்டிக்குப் போனேன். கட்டுரை எழுதினேன். முதல் பரிசு 500 ரூபாய் எனக்கு கிடைத்தது. பீஸ் கட்டிவிட்டு மீதி இருந்த பணத்தில் நண்பன் ஒருவனுடன் பிரியாணி சாப்பிட்டது இப்போதும் நினைவில் இருக்கிறது.



திருப்பதி சாமி

அதுக்கப் றம் சென்னை சட்டக் கல்லூரியில பி.எல். சேர்ந்தேன். ஒருவேளை என்னால் கலெக்டர் ஆக முடியாமல் போனால்கூட சட்டம் படித்தால், ஏழை மக்களுக்கு உதவலாம் என நினைத்தேன்.

சட்டக் கல்லூரியில் எனக்குக் கிடைச்ச ஒரு பொக்கிஷம் திருப்பதிசாமி. எனக்கு மிகவும் நெருக்கமான நண்பன். பேச்சுப் போட்டிகள் எங்கே நடந்தாலும் நானும் திருப்பதிசாமியும் கிளம்பிவிடுவோம். நாங்கள் இருவரும் நிறைய படிப்போம். நிறைய பேசுவோம். பேச்சுப் போட்டியில் பச்சையப்பன் கல்லூரியைச் சேர்ந்த ஒரு மாணவர் அதிகபடியான பரிசுகளை வாங்குவார். அண்ணா நகர் தமிழ் இலக்கியப் பேரவை சார்பில் 1987-ம் வருஷம் ஒரு பேச்சுப் போட்டி நடந்தது. அந்தப் போட்டியில் நாங்கள் முதல் பரிசை அடித்தே தீருவது என்று திட்டமிட்டு நானும் திருப்பதிசாமியும் பேச்சுப் போட்டிக்குக் கிளம்பினோம். ஈழம் நேற்று... இன்று... நாளை என்ற தலைப்பில் நான் பேசினேன். முதல் பரிசையும் வாங்கினேன்.

படிக்கும்போது விகடன் மாணவப் பத்திரிகையாளர் திட்டத்தில் திருப்பதிசாமி தேர்வானான். படிப்  முடிந்ததும் அவன் சினிமா பக்கம் போனான். நான் சிவில் சர்வீஸ் தேர்வுக்காகத் தொடர்ந்து படிக்க ஆரம்பித்தேன்.

பல வருடப் போராட்டத்துக்குப் பிறகு திருப்பதிசாமி ஒரு படத்தை இயக்கினான். அந்தப் படம் முடிவதற்குள் விபத்து ஒன்றில் அகால மரணமடைந்துவிட்டான். திருப்பதிசாமியின் மரணம் என்னை மிகவும் பாதித்தது. ஒரு நல்ல நண்பனை இழந்துவிட்டேன்.

'சகாயம்... உன்னால முடியும்டா! கண்டிப்பா நீ கலெக்டரா வருவே..!' என்று என்னை நித்தமும் ஊக்கப்படுத்திய நல்ல நண்பன் இன்று என்னுடன் இல்லை. அவன் என் அருகில் இல்லை என்றாலும் என் மனதோடு இருக்கிறான். நான் போகும் இடமெல்லாம் என்னோடு வருகிறான். நான் செய்யும் பணிகளைப் பார்த்து என்னை வாழ்த்துகிறான்!'' சொல்லும்போதே சகாயத்தின் கண்கள் பனிக்கிறது.

நட்  க்கு ஏது மரணம்?

# வாழ்க்கையின் வரம்!

எந்த வேலையாக இருந்தாலும் சரி... வேலைக்குச் சேர்ந்த முதல் நாள் என்பது யாராலும் மறக்க முடியாது. அந்த முதல் நாள்தான் நமது அடுத்தடுத்த திட்டங்களுக்கு அடிப்படையாக அமையும். சகாயத்தின் முதல் நாளில் இருந்து தொடங்குகிறது இந்தப் பயணம்...

''சிவில் சர்வீஸ் எக்ஸாம்ல பாஸ் பண்ணி வேலைக்கு சேர்ந்த முதல் நாள்... அந்த சீட்ல போய் உட்கார்ந்தேன். 'நமக்கானது எதுவோ அதை மட்டும்தான் நாம எடுத்துக்கணும்... ரியுதாடா! கஷ்டம்னு வரவங்களுக்கு உதவி செய்!' - அம்மாவும் அப்பாவும் சின்ன வயசில் சொன்னது மனதுக்குள் வந்துபோனது.

வேலைக்குச் சேர்ந்த துசுல ஒரு வருஷமோ, அஞ்சு வருஷமோ நேர்மையா இருக்கலாம். அது பெரிய விஷயம் இல்லை. சர்வீஸ்ல இருந்து ரிட்டையர் ஆகும் கடைசி நாள் வரை அந்த நேர்மை தொடரணும். அதுதானே நாம் நேர்மையாக இருந்ததற்கு அர்த்தம். ஒரு நாள்... ஒரு முறை தப் செஞ்சாலும், நேர்மையாக இருந்தேன் என்று சொல்ல முடியாது.

நான் நேர்மையாக இருக்கணும்னு முடிவு செஞ்சேன். நேர்மையாக இருப்பதில் ஒரே ஒரு சிக்கல் மட்டும்தான். நாளுக்கு நாள் எதிரிகள் அதிகமாகிக்கொண்டே போவாங்க. அதுக்கு என்ன செய்ய முடியும்?

எதிர்ப் களும், எதிரிகளும் அதிகமாக அதிகமாக நம் பலம் அதிகமாகிறது என்பதுதானே அர்த்தம். எவ்வளவு நேர்மையானவனாக இருந்தாலும் அவனை இரண்டு விஷயங்கள் மாற்றிவிடும். ஒன்று வரப்போகும் மனைவி. அடுத்து குழந்தைகள். வீட்டுல கல்யாணம் என்ற பேச்சு வந்ததும் எனக்கும் அந்த பயம் வந்தது.

பொண்ணு பார்க்க ஆரம்பிச்சாங்க. மதுரையில இருந்த எங்க

சொந்தக்காரப் பொண்ணு விமலாவை பேசி முடிச்சாங்க. கல்யாணமும் முடிஞ்சுது. என் அலைவரிசைக்கு ஏத்தவங்களா விமலாவும் வந்து சேர்ந்தாங்க. இன்றைக்கு வரைக்கும் எனக்கு அது வேணும்... இது வேணும்னு கேட்டது இல்லை. நான் வாங்குற சம்பளத்துல கணக்குப் பார்த்துக் குடும்பம் நடத்துற பொறுப்பான மனைவி அவங்க!

என் குழந்தைகள் திலீபனும், யாழினியும்கூட அப்படித்தான். என் மகன் திலீபன் பத்தாம் வகுப்  படித்துக் கொண்டிருந்தபோது நான் மதுரையில் இருந்து திடீரென மாற்றல் செய்யப்பட்டேன். அங்கிருந்து கிளம்ப நினைத்தபோது என் மகன் திலீபன், `அப்பா நான் இந்த ஆண்டு பத்தாம் வகுப்  தேர்வு எழுதுறேன். இப்போ திடீர்னு என்னை வேற பள்ளிக்கூடத்துக்கு மாற்றினால் அங்கேபோய் படிக்கிறது கஷ்டம்.  து இடம்...  து நண்பர்கள் என்று செட் ஆகவே லேட் ஆகிடும்பா. அதனால இந்த ஒரு வருஷம் மட்டும் நான் இங்கேயே படிக்கிறேன்' என்று சொன்னான். அவன் சொன்ன விஷயம் எனக்கு சரியென பட்டது. ஆனால் பாதுகாப் பற்றி எனக்கு கவலையாக இருந்தது. இருந்தாலும் மகனின் விருபத்தை நான் ஏற்றுக்கொண்டு என் குடும்பத்தை மதுரையிலேயே தங்கவைத்துவிட்டு நான் மட்டும் சென்னைக்குக் கிளம்பினேன்.

என் வாழ்க்கையில் நான் பிள்ளைகளைவிட்டுப் பிரிந்து தனியாக செல்வது அதுதான் முதல் முறை. சென்னையில் நான் தங்கியிருந்த சமயத்தில் தினமும் ஹோட்டல் உணவு சாப்பிட்டு என் உடல்நலம் பாதிக்கப்பட்டது. டைபாய்டு காய்ச்சல் வந்து சென்னையில் உள்ள மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டேன். சிகிச்சைக்குப் பிறகு நான் வீடு திரும்பியபோது, என் மகன் திலீபனிடம், `தம்பி உன் படிப் க்காகத்தான் நான் இவ்வளவு கஷ்டப்படுகிறேன். நீ நன்றாகப் படிக்க வேண்டும்' என்று சொல்வேன். அதற்கு கொஞ்சமும் யோசிக்காமல் திலீபன் என்னிடம் சொன்னான். `அப்பா... எங்களுக்காக நீங்கள் கஷ்டப்படுகிறீர்களா, உங்கள் கொள்கைக்காக நாங்கள் கஷ்டப்படுகிறோமா என்று யோசித்துப் பாருங்கள் அப்பா. அதுக்காக நீங்கள் கவலைப்பட வேண்டாம். உங்களுடைய நேர்மைக்கு நாங்கள் எப்போதும் பக்கபலமாக இருப்போம்' என்று சொன்னான். எனக்குப் பெருமையாக இருந்தது.''




மனைவியுடன் சகாயம்

ரிந்துகொண்ட மனைவியும் குழந்தைகளும் கிடைத்தால் வாழ்க்கை அர்த்தமுள்ளதாக மட்டுமல்ல... வரமாகவும் மாறிவிடும்.

# ஆண்டவன் வைத்த சோதனை!

பெண் குழந்தைகள் என்றாலே எப்போதும் அப்பாக்களுக்கு தனிப் பாசம் இருக்கும். சகாயமும் அதற்கு விதிவிலக்கு அல்ல. மகள் யாழினியைப் பற்றிப் பேசினால் பேசிக்கொண்டே இருக்கிறார். கோவையில் கலால் துறையில் டெ டி கமிஷனராக சகாயம் பணியாற்றியபோது யாழினிக்கு ஒரு பிரச்னை. ஓர் அப்பாவாக யாரும் சந்திக்கக்கூடாத பிரச்னை.

''யாழினி அப்போ மூன்று மாதக் குழந்தை. ஒரு நாள் ராத்திரி திடீர்னு அவளுக்கு மூச்சுவிட சிரமமாகிடுச்சு. ஆஸ்பத்திரிக்கு யாழினியைத் தூக்கிட்டு நானும் என் மனைவியும் ஓடினோம். டாக்டர் பார்த்துட்டு உடனே அட்மிட் பண்ணுங்கன்னு சொல்லிட்டாங்க. அட்மிட் பண்ணிட்டேன். உடனடியாக ஐந்தாயிரம் பணம் கட்டச் சொல்றாங்க. அது மாசக் கடைசி. கையில் ஆயிரம் ரூபாய்தான் பணம் இருந்தது. மாதச் சம்பளக்காரன் எல்லோருமே எதிர்கொள்ளும் பிரச்னைதான் இது. எனக்குக் கீழே வேலை பார்க்கிறவங்ககிட்ட கடன் கேட்கவும் தயக்கமாக இருந்தது. என்ன செய்யுறதுன்னு யோசித்தபோது என் நினைவுக்கு வந்தவர் ஆசிரியர் கண்ணன்.

நான் கள்ளக்குறிச்சியில் பணியாற்றியபோது அங்கே ஆசிரியராக இருந்தவர். மனிதநேயமிக்க மனிதர். சமூகப் பற்றுள்ளவர். என்னிடம் மிகவும் அன்பாகப் பழகக்கூடியவர். அந்த சமயத்துலதான் அவரும் கோவைக்கு மாற்றலாகி வந்திருந்தார். அந்த நேரத்துல அவருக்குத்தான் போன் பண்ணினேன். தயக்கத்தோடு என் நிலமையை அவரிடம் சொல்லி, ஐந்தாயிரம் கடன் கேட்டேன். அடுத்த அரை மணி நேரத்துல பணத்தோட ஆஸ்பத்திரிக்கு வந்துவிட்டார். யாழினிக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. கொஞ்சம் கொஞ்சமாக அவள் குணமடைந்தாள். சம்பளம் வாங்கியதும் முதல் வேலையாக அந்தக் கடனை அவருக்குத் திருப்பிக் கொடுத்துட்டேன்'' என்று அந்த இக்கட்டான

சூழ்நிலையை விளக்கினார் சகாயம்.

சகாயம் நினைத்திருந்தால் அந்த நேரத்தில் லட்சம் லட்சமாக பணத்தைப் ரட்டியிருக்க முடியும். அப்போது சகாயம் இருந்தது கலால் துறை. மதுபானக் கடைகள் அத்தனையும் தனியார் கையில் இருந்த காலம் அது. ஒவ்வோர் ஆண்டும் கடைகளின் லைசன்ஸைப் துப்பிக்க வேண்டும்.

சகாயத்தின் கட்டுப்பாட்டில் 650 பிராந்திக் கடைகள் இருந்தது. ஒவ்வொரு கடைக்கும் லைசன்ஸைப் துப்பிக்க அவர் கேட்காமலேயே 10 ஆயிரம் கொடுக்க கடையின் உரிமையாளர்கள் தயாராக இருந்தார்கள். அவர் மட்டும் தலையாட்டி இருந்தால் 65 லட்சம் வீடு தேடி வந்திருக்கும். ஆனால், சகாயம் அதைச் செய்யவில்லை. கடைகளைப் துப்பிக்க விதிமுறைகளின்படி என்ன தேவையோ அதெல்லாம் சரியாக இருக்க வேண்டும் என்று கண்டிப் டன் சொல்லி விட்டார். 'லைசன்ஸ் கேட்டு யாரும் நேரில் அலுவலகத்துக்கு வரவே கூடாது. உங்களது லைசன்ஸ் தபாலில் வீடு தேடிவரும்' என்று கண்டிப் டன் சொல்லிவிட்டார். தமிழக வரலாற்றிலேயே தனியார் மதுபானக் கடைகளின் உரிமத்தை தபாலில் அனுப்பி ரட்சி செய்த தவப் தல்வன் சகாயம்!

'என்ன சார் பொழைக்கத் தெரியாத ஆளா இருக்கீங்களே...' என்று சகாயத்தின் காதுபடவே பலரும் பேசினார்கள். அவர்களிடன் சகாயம் என்ன சொன்னார் தெரியுமா! "இது எல்லாமே என்னுடைய நேர்மைக்கு ஆண்டவன் வெச்சிருக்கும் ஒரு சோதனைதான்! அந்த சோதனையில் நிச்சயம் நான் ஜெயிப்பேன்."

இன்றைக்கும் சகாயத்தின் மனைவி விமலா எங்காவது வெளியில் செல்ல வேண்டுமானால் அரசுப் பேருந்தில்தான் பயணிக்கிறார். சொந்தமாக ஒரு கார் வாங்கிடலாமே சார் என்று சகாயத்திடம் கேட்டால் சிரிக்கிறார்

"வேலைக்கு சேர்ந்து 13 வருஷம் வரைக்கும் எனக்கு வங்கியில் அக்கௌன்ட் கிடையாது. லோன் வாங்குறதுக்காகத் தான் முதன்முறையாக வங்கியில் அக்கௌன்ட் ஆரம்பிச்சேன். நான் இதை வெளியில சொன்னா யாராவது நம் வாங்களா? அப்படியே நம்பினாலும் கடைசியில அவங்க சொல்ற வார்த்தை, 'பொழைக்கத் தெரியாத ஆளுப்பா!' என்பதாகத்தான் இருக்கும்.

இப்படி என்னுடைய நேர்மையை சோதிக்க ஆண்டவன் பல சோதனைகளை வெச்சுப்பார்த்தாரு. அதில் ஜெயிச்சது என்னவோ

நானும் என் நேர்மையும்தான்! உங்களுக்கும் வாழ்க்கையில் பல நேரங்களில் சோதனைகள் வரும். உங்களையும், உங்களது நேர்மையையும் அது பலவீனப் படுத்துவதாகவும் இருக்கும். அதைப்பற்றி கவலையே படாதீர்கள். எந்தச் சூழ்நிலையிலும் யாருக்காகவும் உங்களது நேர்மையை விட்டுக்கொடுக்காதீர்கள். நிச்சயம் அந்த நேர்மை ஒருநாள் உங்களை உயர்ந்த இடத்துக்கு கொண்டு செல்லும். உங்களை நிச்சயம் அது காப்பற்றும்.

பொது வாழ்வில் ஊழல் செய்யாமல் நேர்மை நெறியோடு இருப்பவர்கள் பைத்தியக்காரர்கள், பிழைக்கத் தெரியாதவர்கள் என்று `பிழைக்கத் தெரிந்தவர்கள்' பட்டம் சூட்டிப் பரிகாசம் செய்வது உண்டு. நேர்மையை லட்சியமாகக் கொண்டிருப்பவர்கள் அந்தப் பரிகாசங்களை பற்றி கவலைப் படாமல் அலட்சியப்படுத்துவதே ஆரோக்கியம்.

இந்த நேர்மையால் நான் இழந்ததும் பெற்றதும் என்ன தெரியுமா?



குடும்பத்தினருடன் சகாயம்...

இருபத்தியோரு ஆண்டு காலப் பணியில் இருபத்தியோரு முறை மாற்றல். குழந்தைகளின் கல்வி பாதிப் . சக ஊழியர்களின் வெறுப் . பிழைக்கத் தெரிந்தவர்களின் பரிகாசம். சின்னச் சின்ன அவமானம். தனிமைப்படுத்தப் படுதல். ஆனால், இவை

எல்லாவற்றையும் மீறி மக்களிடம் பெற்றிருக்கக்கூடிய நம்பிக்கை. அது கொடுக்கும் ஆத்ம திருப்தி. நண்பர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறையலாம். எண்ணங்களில் உயர்வானவர்கள் நிறைய பேர் என்னுடன் இருக்கிறார்கள்.

ஆடம்பரம் தவிர்த்த எளிய வாழ்க்கை முறையும், என்றும் மாறாத லட்சிய தாகமும் நேர்மைப் பயணத்தில் நிறுத்தங்கள் இல்லாது நெடுந் தொலைவுக்கு கொண்டு செல்லும் என்பதே உண்மை.

ஓர் ஏழை நாட்டில் அரசு ஊழியரின் தேவைக்கு இன்று அரசு போதுமான அளவு சம்பளமளிக்கிறது. ஆனால் ஆசைக்கும் பேராசைக்கும் யாராலும் சம்பளம் அளிக்க முடியாது. அடிப்படைத் தேவைக்கு அளிக்கப்படும் சம்பளம் போதுமானது. ஆடம்பரத் தேவைகளுக்கு யார்தான் கூலி கொடுக்க இயலும்? பெருகிப் போன நுகர்வுக் கலாச்சாரத்தின் பிம்பங்களாக, ஆடம்பர வாழ்வின் அம்சங்களாக அரசு ஊழியர்கள், அலுவலர்கள் உட்பட பெரும்பான்மை சமூகமே இருக்கின்றபோது தங்கள் நுகர்வுத் தேவையை நிறைவேற்றிக்கொள்ள வாய்ப் க் கிடைப்பவர்களெல்லாம் லஞ்சம் பெற கை நீட்டுகிறார்கள். மாறிப்போன நம் சமூகத்தின் மதிப்பீடுகள் லஞ்சம் வாங்குவதை ஊக்குவிப்பதாகவே இருக்கிறபோது லஞ்சம் வாங்க எவர் தான் தயங்குவார்கள்? ஆனாலும், அரசு ஊழியர்களில், அலுவலர்களில் நேர்மையாளர்களும் மிஞ்சி இருக்கிறார்கள். அவர்கள் நம் நேசத்துக்கு உரியவர்கள் மட்டுமல்ல போற்றுதலுக்கு உரிய னிதர்களாகவே நான் கருதுகிறேன்" என்கிறார் சகாயம்.

'இந்த உலகத்தால் எல்லா மனிதர்களுடைய தேவைகளையும் பூர்த்தி செய்ய இயலும், ஆனால் ஒரு தனி மனிதனின் பேராசையை நிறைவேற்ற ஒருநாளும் அதனால் முடியாது' என்று மகாத்மா காந்தி சொன்னதுதான் என் நினைவுக்கு வருகிறது.

# 5

# ஆக்ஷன் ஆரம்பம்!

சகாயம் வாழ்க்கையில் சந்தித்த முதல் சவால் இது. ஒட்டுமொத்த இந்தியாவையும் திரும்பிப்பார்க்க வைத்த விவகாரம் இது. அந்த சமயத்தில் சகாயம் காஞ்சி ரம் மாவட்டத்தின் டி.ஆர்ஓ.

வயதான பெரியவர் ஒருவர் காஞ்சி ரத்தில் பெப்சி குளிர்பானத்தை வாங்குகிறார். அந்த பாட்டிலில் அழுக்குப் படலம் மிதக்கிறது. திறக்கப்படாத அந்த அழுக்குப் படந்த பாட்டிலுடன் சகாயத்தைச் சந்திக்கிறார். பெப்சி பாட்டிலைக் காட்டி கார் செய்கிறார். ஆக்ஷன் ஆரம்பமாகிறது.

''அந்தப் பெரியவர் கொண்டுவந்த பெப்சி பாட்டிலை நான் வாங்கிப் பார்த்தேன். பாட்டிலுக்கு உள்ளே அழுக்கு அப்பட்டமாகத் தெரிந்தது. உடனே அதிகாரிகளைக் கூப்பிட்டேன். பெப்சி வைத்திருக்கும் குடோன், கடைகளில் சோதனை நடத்தணும் கிளம் ங்க என்று அவங்கிட்ட சொன்னேன். எல்லோரும் ஒருவிதத் தயக்கத்துடன் என்னைப் பார்த்தாங்க. 'சார் அது ரொம்பவும் பெரிய இடம்... நாம போகணுமா?' என்று சிலர் பயந்தாங்க.

மனுஷங்க காசு கொடுத்து வாங்கிக் குடிக்கும் குளிர் பானத்துல குப்பை இருக்குது. நிச்சயமாக நாம் சென்று பார்க்க வேண்டும் என நான் கடைகளிலும் குடோன்களிலும் சோதனை செய்தேன். பல இடங்களில் சோதனை செய்ததில், குளிர்பான பாட்டிகள் பலவற்றிலும் அழுக்குப் படலம் படர்ந்திருப்பதைக் கண்கூடாகப் பார்த்தேன். அதில் சில பாட்டிகளை எடுத்து வந்தேன். லேப் டெஸ்ட்டுக்கு அனுப்பி வைத்தேன். சில தினங்களுக்குப் பிறகு லேப் ரிசல்ட் வந்தது. 'இது மனிதர்கள் குடிக்க ஏற்ற பானம் அல்ல!' என்று அந்த ரிசல்ட் சொன்னது.

லேப் ரிப்போர்ட்டை அடிப்படையாக வைத்து விடியும் வரை தூங்காமல் உத்தரவு ஒன்றை தயாரித்தேன். காலை விடிந்ததும் செங்கல்பட்டு தாசில்தாரை தொடர் கொண்டு எட்டுப் பூட்டுகள்

வாங்கிக்கொண்டு ஒன்பது மணியளவில் சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலைக்கு வரச் சொன்னேன். மதுராந்தகம் ஆர்.டி.ஓ-வையும் வர வழைத்தேன். தாசில்தார் எட்டுப் பூட்டுக்களுடன் நான் சொன்ன இடத்துக்கு வந்தார்.

அங்கிருந்து மதுராந்தகத்தில் உள்ள பெப்சி கம்பெனிக்குப் போனேன். பெப்சி கம்பெனியின் மெயின் கேட்டுக்கு அருகே எங்களது வண்டியை நிறுத்தச் சொன்னேன்.

நான் தயார் செய்த உத்தரவு நகல் ஒன்றை ஆர்.டி.ஓ-விடம் கொடுத்தேன். 'இதை கம்பெனியின் உள்ளே இருக்கும் மேனேஜரிடம் கொடுங்கள். அவரைப் படிக்கச் சொல்லுங்கள். 'உங்கள் கம்பெனியில் தயாரிக்கும் குளிர்பானம் மக்கள் குடிப்பதற்கு ஏற்ற பானம் அல்ல என்று லேப் ரிப்போர்ட் சொல்கிறது. அதனால் உள்ளே இருக்கும் அனைவரும் தயவுசெய்து வெளியேறுங்கள்' என்று அவரிடம் சொல்லி அனைவரையும் வெளியேற்றுங்கள். பிறகு கேட்டை இழுத்து மூடி சீல் வையுங்கள்' என்று ஆர்.டி.ஓ-விடம் சொன்னதும் அவர் ஆடிப்போய்விட்டார்.

'என்ன சார் இப்படி சொல்லிட்டீங்க... பெப்சி கம்பெனிக்கு சீல் வைக்கிறது சாதாரண விஷயமா? பெரிய பிரச்னை ஆகிடும் சார். எதுக்கும் கலெக்டர்கிட்ட ஒரு வார்த்தை கேட்டுக்கலாமே...'னு தயங்கினார். கலெக்டரைக் கேட்டால் நிச்சயமா சீல் வைக்க அனுமதி கொடுக்க மாட்டார். நம்மையும் சீல் வைக்கவிட மாட்டார். சட்டப்பட்டி இந்தக் கம்பெனியை சீல் வைப்பதற்கு நமக்கு அதிகாரமும் இருக்கு. நீங்க தைரியமா சீல் வைங்க. என்ன பிரச்னை வந்தாலும் நான் பார்த்துக்குறேன் என்று அவரிடம் சொன்னேன்.



ஆர்.டி.ஓ-வும் தாசில்தாரும் தயக்கத்துடன் பெப்சி கம்பெனிக்குள் போனார்கள். நேரம் கடந்துகொண்டே இருந்தது. ஒரு மணி நேரத்துக்குப் பிறகு இருவரும் வெளியில் வந்தார்கள்

'சார் அவங்க அமெரிக்கா வரைக்கும் பேசுறாங்க. யாரோ பெரிய பெரிய ஆளுங்க பேரை எல்லாம் சொல்லி அவங்ககிட்டப் பேசிக்கிறதா சொல்றாங்க... என்ன சார் பண்ணலாம்னு?' என்கிட்ட வந்து சொன்னார்.

இன்னும் பத்து நிமிஷத்துல உள்ளே இருக்கிறவங்க அத்தனை பேரும் வெளியில வரலைன்னா அவங்களை அரெஸ்ட் பண்ணிட்டு சீல் வைக்க வேண்டி இருக்கும்னு நான் சொன்னதாகச் சொல்லுங்க என்று அவர்களிடம் சொல்லி மறுபடியும் அந்தக் கம்பெனிக்குள் அனுப்பினேன். அவர்கள் உள்ளே போய் நான் சொன்னதைச் சொல்லவும், உள்ளே இருந்த அத்தனை பேரும் பயந்துட்டு வெளியே வந்துட்டாங்க. கம்பெனியை இழுத்து மூடி எட்டுப் பூட்டுக் களையும் போட்டு சீல் வெச்சுட்டு அங்கிருந்து கிளம்பினேன்.

அங்கிருந்து என்னோட ஆபீஸ்க்குப் போனால் நிச்சயம் பிரச்னை வரும் என்று எனக்குத் தெரியும். அதனால் அங்கிருந்து ஒரு

குக்கிராமத்துக்குப் போனேன். அந்த கிராமத்தில் ரேஷன் கடை, பள்ளிக்கூடங்கள் போன்றவற்றை ஆய்வு செய்தேன். இந்த சமயத்துல கலெக்டரில் தொடங்கி தலைமைச் செயலர் வரை என்னைப் பல இடங்களிலும் தேடி உள்ளனர். என் வீட்டுக்குப் பல முறை போன் செய்து என் மனைவியிடம் கேட்டிருக்கிறார்கள். அவருக்கு எந்த விவரமும் தெரியாது. அந்த சமயத்தில் செல்போன் கிடையாது என்பதால் என்னை அவர்களால் தொடர் கொள்ள முடியவில்லை.



இரவு எட்டு மணிக்கு வீட்டுக்கு வந்தேன். வீட்டு வாசலிலேயே என் மனைவி காத்திருந்தாங்க. 'என்னங்க செஞ்சீங்க..? யார் யாரோ உங்களைக் கேட்டு விசாரிச்சாங்க. கலெக்டர், உள்துறை செயலர், தலைமைச் செயலர்னு மாறிமாறி போன் பண்ணினாங்க...' என்று பதறினார். அவரை சமாதானப்படுத்திவிட்டு அதன்பிறகு நிதானமாக கலெக்டர், உள் துறை செயலர் என்று எல்லோருக்கும் பேசினேன்.

'யாரைக் கேட்டு சீல் வெச்சீங்க? என்ன காரியம் பண்ணிருக்கீங்க தெரியுமா?' என்று பயங்கர டோஸ் விழுந்துச்சு. உச்சகட்டமாக, 'உங்களை சஸ்பெண்ட் பண்ணப் போறோம்...' என்று மிரட்டினாங்க. நான் என் கடமையைத் தான் செய்தேன். அந்த பானம் குடிக்க ஏற்றது அல்ல என்று லேப் கொடுத்த ரிப்போர்ட் என்னிடம் இருக்கிறது. மக்களுக்கு நல்லது செஞ்சதுக்காக சஸ்பெண்ட் செய்யுறதாக இருந்தால் தாராளமாகச் செய்யுங்கள். அதை நான்

சட்டப்படி சந்திக்கத் தயாராக இருக்கேன் என்று சொன்னேன். அது மட்டுமல்ல... பெப்சி குளிர்பானத்தை காஞ்சி ரம் மாவட்டத்தில் விற்பனை செய்யவும் தடை விதித்தேன்.

பெட்டி படுக்கையெல்லாம் கட்டிட்டுத் தயாரா இரும்மா... நாளைக்கே நாம வேற ஊருக்குப் போனாலும், போக வேண்டியிருக்கும் என்று என் மனைவியிடம் மட்டும் சொன்னேன்.

அடுத்த நாள் நான் பெப்சிக்கு சீல் வெச்சது பற்றி எந்த பத்திரிகையிலும் செய்தி வரவில்லை. வராமல் பார்த்துக் கொண்டார்கள். இரண்டு நாட்களுக்குப் பிறகு ஜூனியர் விகடனில் நான் பெப்சிக்கு சீல் வைத்தது பற்றி விலாவரியாக எழுதி இருந்தார்கள். அதன் பிறகுதான் இந்த விஷயமே வெளி உலகத்துக்குத் தெரியவந்தது.

மக்கள் உடல் நலத்தைக் கெடுத்த ஒரு பன்னாட்டு கம்பெனி இந்திய சட்டங்களுக்கு முன் பணிந்தாக வேண்டும். அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தோம் என்ற ஆத்ம திருப்தியும், சந்தோஷமும் இன்று வரை எனக்கு இருக்கிறது.''

சகாயத்துக்கு மிகவும் பிடித்தமான பொன் மொழி எது தெரியுமா?

`அமைதியான கடல் ஆற்றலுள்ள மாலுமியை உருவாக்காது!'

# 6

# தர்ம யுத்தம்!

சகாயம் காஞ்சி ரத்தில் பணியாற்றியபோது அவர் மீது காவல் துறை வழக்குப் பதிவு செய்த சம்பவமும் நடந்தது. அதுவும் லஞ்சத்துக்கும், ஊழலுக்கும் எதிரான தர்மயுத்தம் தான்!

அந்த சம்பவத்தை அண்மையில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் சகாயமே விளக்கினார்.

''காஞ்சி ரத்தில் நான் பணியாற்றிய சமயத்தில் கிராமத்து இளைஞர்கள் சிலர் அங்கிருந்த மாவட்ட ஆட்சியரை சந்திக்க வந்தனர். அவரிடம் ஒரு மனு கொடுத்துவிட்டு என்னிடமும் வந்தனர். 'ஐயா எங்கள் பகுதியில் கள்ளும், சாராயமும் அதிகமாக விற்கிறார்கள். அதில் ஏதோ ரசாயனத்தையும் கலக்கிறார்கள். இதைக் குடிப்பவர்களுக்கு பல்வேறு வியாதிகள் எற்படுகிறது. சில விவசாயிகள் இந்த குடிப் பழக்கத்துக்கு அடிமையாகிவிட்டார்கள். சிலர் இறந்துவிட்டனர். சம்பந்தப்பட்ட கள்ளச் சாராய வியாபாரிகள் மீது நீங்கள்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று என்னிடம் சொன்னார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவரும் இந்தப் கார் மீது நடவடிக்கை எடுக்க எனக்கு அறிவுறுத்தினார். நான் உடனடியாக அந்தப் காரை செங்கல்பட்டு காவல் துணைக் கண்காணிப்பாளருக்கு அனுப்பினேன். ஒரு வாரத்துக்குப் பிறகு திரும்பவும் வந்த அந்த கிராமத்து இளைஞர்கள், 'ஐயா ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை' என்று சொன்னார்கள்.

நான் மறுபடியும் கடுமையாக எழுதி அதே காவல் துறை அதிகாரியை நடவடிக்கை எடுக்கச் சொன்னேன். ஆனாலும் எந்த நடவடிக்கையும் இல்லை.

விசாரித்தபோது, லஞ்சமும், ஊழலும் அந்த அதிகாரிகளின் கைகளை கட்டிப்போட்டிருப்பது தெரிந்தது. இளைஞர்கள் சொன்ன கிராமத்துக்கு நானே நேரடியாகச் சென்றேன். கள்

இறக்கியவர்களையும் சாராயம் காய்ச்சிக் கொண்டிருந்தவர் களையும் அந்த கிராமத்து இளைஞர்கள் உதவியுடன் துரத்திப் பிடித்தேன். அவர்களை கிராம நிர்வாக அலுவலரிடம் ஒப்படைத்துவிட்டு, இவர்களை பத்திரமாகக் கொண்டுவாருங்கள் என்று சொன்னேன்.



ஆனால், கிராம நிர்வாக அலுவலர்கள் அந்தக் குற்றவாளிகளைத் தப்பவிட்டுவிட்டனர். அவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்தேன். அவர்களைப் பணி இடை நீக்கம் செய்ய உத்தரவு இட்டேன்.



அடுத்த நாள் காலை என் அலுவலகத்துக்குப் போனேன்.தினமும் காலை காவல் துறை அதிகாரிகளிடம் இருந்து சட்டம் ஒழுங்கு பிரச்னை சம்பந்தமான அறிக்கை வரும். அப்படி வந்த ஓர் அறிக்கையைப் பார்த்து அதிர்ந்துபோனேன். என் மீது எஃப்.ஐ.ஆர். பதிவு செய்யப்பட்டு இருந்தது. என்ன காரணம் என்று பார்த்தால் நான் அந்தக் குற்றவாளிகளை பிடித்ததும் அவர்களிடத்தில் ஒரு வாக்குமூலத்தை பெற்று விட்டேன். அந்த குற்றவாளிகள் இந்த காவல் ஆய்வாளருக்கு இவ்வளவு பணம் மாமூல் கொடுத்து இருக்கிறேன். ஒவ்வொருவருக்கும் இவ்வளவு பணம் லஞ்சம் கொடுத்து இருக்கிறேன் என்பதை என்னிடம் வாக்குமூலமாகக் கொடுத்திருந்தனர்.

என்னால் பணி இடை நீக்கம் செய்யப்பட்ட அதிகாரிகளும், மாமூல் பெற்ற காவல் துறை அதிகாரிகளும் சேர்ந்து நான் ஓர் அலுவலரை அடித்துவிட்டேன் என்று சொல்லி என் மீது எஃப்.ஐ.ஆர். பதிவு செய்திருந்தனர். லஞ்சம் என்பது இந்த நாட்டில் எவ்வளவு அக்கிரமங்களை செய்யும் என்பதற்கு இது ஓர் உதாரணம். நேர்மையாக இருந்தால் இன்னும் எத்தனை எஃப்.ஐ.ஆர். போடுவார்களோ என்று அப்போது நினைத்தேன். வேறு யாராவதாக

இருந்தால் நேர்மையைத் தூக்கித் தூரப்போட்டுவிட்டு ஓடியிருப்பார்கள். எனக்கு அப்படி ஓட மனமில்லை. எனக்கு நேர்மையைப் பிடிக்கும். நேர்மைக்கு என்னைப் பிடிக்கும்.

உடனே நான் காவல் துறை கண்காணிப்பாளரைத் தொடர் கொண்டு கேட்டேன். 'யார் கார் கொடுத்தாலும் வழக்குப் பதிவு செய்வார்கள்!' என்று சொன்னார். நான் ஏற்கனவே குற்றவாளிகளிடம் வாக்குமூலம் வாங்கிவிட்டேன். அதில் போலீஸ் அதிகாரிகள் எவ்வளவு லஞ்சம் வாங்கினார்கள் என்ற விவரம் உள்ளது. ஊழல் தடுப் ச் சட்டத்தின் கீழ் உங்கள் மீதும் உங்கள் காவலர்கள் மீதும் கார் கொடுத்தால் எஃப்.ஐ.ஆர். போடுவார்களா? என்று கேட்டேன்.

'ஏன் இப்படி எல்லாம் விதண்டாவாதம் பேசுகிறீர்கள்?' என்றார் அந்தக் கண்காணிப்பாளர்.

என்ன செய்யலாம் என யோசித்தேன். நானே ஒரு சம்மன் தாயார் செய்தேன். 'நீங்கள் தொடர்ந்து குற்றவாளிகள் இடத்திலேயே லஞ்சத்தைப் பெற்றுக்கொண்டு இருக்கிறீர்கள். எனவே குறிப்பிட்ட தேதியில் எனக்கு முன்னால் ஆஜராக வேண்டும். நான் ஏன் உங்கள் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்க கூடாது என்று விளக்கம் அளிக்கவும்' - என்று சம்பந்தப்பட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர், இன்ஸ்பெக்டர், எஸ்.ஐ. ஆகியோருக்கு அந்த சம்மனை அனுப்பினேன்

மாலை 5 மணிக்கு சம்மன் அவர்களுக்குப் போனது. 5.07 மணிக்கு டி.எஸ்.பி. என்னிடம் தொலைபேசியில் வந்தார். 'இப்போ பேச எதுவும் இல்லை. நான் சொன்ன தேதியில் நேரில் வாங்க...' என்று தவிர்த்துவிட்டேன். மீண்டும் மீண்டும் எனக்கு போன் செய்தார். நான் பேசவில்லை.

அடுத்த நாள் காலை 5 மணிக்கு எழுந்து வீட்டுக்கு வெளியே பார்த்தால், அந்த டி.எஸ்.பி., இன்ஸ்பெக்டர், சப்இன்ஸ்பெக்டர் ஆகியோர் என் வீட்டு வாசலில் காத்திருந்தனர். 'ஐயா... சம்மன் அனுப்பியிருந்தீங்க. அதனால் பார்க்கலாம்னு வந்தோம்...' என்று இழுத்தார்கள். எதுக்கு இவ்வளவு அவசரப்படுறீங்க? அலுவலகத்துல வந்து பாருங்க என்று அங்கேயும் தவிர்த்து அனுப்பிவிட்டேன்.

அலுவலகத்துக்கு வந்தார்கள். 'வருவாய்த் துறை எல்லாம் தெய்வம் மாதிரி. நாங்கதான் தப் பண்ணிட்டோம். மன்னிச்சிடுங்க ஐயா...' என்று கெஞ்சினார்கள். தெய்வத்து மேலயே எஃப்.ஐ.ஆர்.

போடுற அளவுக்கு நீங்க பெரிய ஆளுங்க என்றேன். அவர்கள் பேசவில்லை. லஞ்சத்துக்கு எதிராகப் போராடும் அதிகாரிகளுக்கு லஞ்சப் பணத்தில் சுக வாழ்க்கை அனுபவித்த அரசு அதிகாரிகள் எப்படி எல்லாம் தொல்லை கொடுக்கிறார்கள் என்பதற்கு உதாரணம் தான் இந்த சம்பவம்!

இன்றைக்கு ஊழல் செய்பவர்கள் வெகு வலிமையாக இருக்கிறார்கள். அவர்களை எதிர்த்து மக்கள் போராட வேண்டும் என்றால் துணிச்சலும், நேர்மையும் மட்டும் போதாது. மக்களுக்கு சட்ட அறிவும் மிகவும் அவசியம். தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் தண்டனை வாங்கித் தராமல் ஓயவும் மாட்டேன். ஒவ்வொரு முறை என்னை இட மாற்றம் செய்யும்போதும், என் நேர்மை கூடிக்கொண்டே போகிறது. எங்கெல்லாம் நேர்மைக்குக் குரல் கொடுப்பவர்கள் இருக்கிறார்களோ, அங்கெல்லாம் நான் இருப்பேன்" என்று கர்ஜித்தார்.

சகாயத்தின் தர்ம யுத்தம் தொடர்கிறது!

@tamilbooksworld

# 7

## சுபாஷ் சந்திரபோஸ்... காமராஜர்.. விஜய்!

அதிகாரிகள் யாருக்கும் தகவல் சொல்லாமல் சர்ப்ரைஸாக சில இடங்களுக்கு நீங்கள் விசிட் போனால் நல்லா இருக்குமே சார்...''- ஒரு நாள் நான் கலெக்டர் சகாயத்தை சந்தித்தபோது இப்படிச் சொன்னேன். சற்றே யோசித்தவர், ''அப்படியா சொல்றீங்க... இது நான் அடிக்கடி செய்யுறதுதான்... இப்பவும் போகலாம் வாங்க...'' என்று சிரித்தபடியே விறுவிறுவெனத் தயாரானார். சகாயத்துடன் அவரது உதவியாளர் மாதேஸ்வரன் வந்தார். நாமக்கல் கலெக்டர் அலுவலகத்தில் இருந்து கார் றப்பட்டது.

''எங்கே முதல்ல போகலாம்..? நீங்களே டிரைவருக்கு ரூட் சொல்லுங்க...'' என்றார் கலெக்டர் சகாயம். ராசி ரம் ரூட்டில் போகச் சொன்னோம். 85.குமாரபாளையம் என்ற ஒரு குக்கிராமத்தில் வேலை உறுதியளிப் த் திட்டத்தில் வேலை நடந்து கொண்டிருந்தது. ''இங்கே விசாரிக்கலாமா...'' என்றார் கலெக்டர். நான் தலையாட்டியதும் கார் நின்றது. காரில் இருந்து இறங்கியவர் அங்கே வேலை செய்து கொண்டிருந்தவர்களிடம், ''நான்தான் உங்க மாவட்டத்தோட கலெக்டர் சகாயம். உங்களுக்கு இங்க கூலியெல்லாம் சரியா கொடுக்குறாங்களா..?'' என்று விசாரித்தார்.

''அதெல்லாம் சரியா கொடுத்துடுறாங்க சாமி... ரேஷன் கடையில அரிசி, பருப் தான் சரியா கிடைக்கலை!'' என்று வயதான பாட்டி ஒருவர் சொல்ல... அவரிடம், ''ஏம்மா... இந்த வயசுல நீ எதுக்கு வேலைக்கு வர்ற..? உன் பசங்க எல்லாம் என்ன பண்றாங்க..?'' என்று பரிவோடு விசாரித்தார்.

''மூணு பசங்க சாமி... வயசான காலத்துல யாரும் கண்டுக்க மாட்டேங்குறாங்க. இப்படி ஏதாவது வேலைக்கு வந்து நாலு காசு சம்பாதிச்சாதான் கஞ்சி குடிக்க முடியும்!'' என்று பாட்டி லம்ப... ''பெத்தவங்களைக் கண்டுக்காமத் தவிக்க விடுற பசங்களை ஜெயில்ல போடுறதுக்குக்கூட இப்போ சட்டம் இருக்கு. உன் பசங்களை ஜெயிலுக்கு அனுப்பிடலாமா, சொல்லுங்க...'' என்றார்.

பதறிப்போன பாட்டி, "வேணாம் சாமி... அவனுங்க நல்லபடியா பொழைக்கட்டும். இருக்குற வரைக்கும் நான் சம்பாதிச்சு கஞ்சியோ கூழோ குடிச்சுக்கிறேன். ரேஷன் கடையில அரிசி, பருப் மட்டும் போடச் சொல்லுங்க, போதும்!" என்று கேட்டுக்கொண்டார்.



செல்போனை எடுத்த சகாயம், மாவட்ட வட்ட வழங்கல் அதிகாரிக்கு போனை போட்டார். "ராசி ரம் பக்கத்துல 85.குமாரபாளையம்ங்குற கிராமத்துல ரேஷன் பொருள் எதுவும் சரியா கிடைக்கிறதில்லையாமே! நீங்க உடனே அந்தக் கிராமத்துக்குப் போய் அங்கே என்ன நடக்குதுன்னு விசாரிச்சு சாயந்திரத்துக்குள் ரிப்போர்ட் கொடுங்க!" என்று உத்தரவிட்டவர், அங்கிருந்த பதிவேட்டை சரிபார்த்துவிட்டுக் கிளம்பினார்.

அந்த வழியில் ஒரு பிரிவு ரோடு வந்தது. "இந்த வழியாகப் போய்ப் பார்க்கலாமா...?" என்று கேட்டார் சகாயம். கார் அந்தப் பிரிவு சாலையில் சென்றது. 'ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, பொ.கல்பாளையம்' என ஒரு போர்டு தெரிந்தது. காரில் இருந்து இறங்கியவர் அந்தப் பள்ளிக்குள் குந்தார். கலெக்டரின் காரைப் பார்த்ததும் பள்ளியின் தலைமை ஆசிரியர் மிரண்டுவிட்டார். ஆசிரியர்கள் ஓடி வந்தனர்.

"எல்லோரும் போய் அவங்கவங்க வேலையைப் பாருங்க..." என்று

சொல்லிவிட்டு, 6-ம் வகுப் க்குள் நுழைந்தார் சகாயம். ஒரு மாணவனை எழுப்பி ஆங்கிலப் த்தகத்தில் ஒரு பத்தியை வாசிக்கச் சொன்னார். அந்த மாணவன் தடுமாறினான். அடுத்த மாணவனைப் படிக்கச் சொன்னார். அவனும் தடுமாறினான்.

''இந்த வகுப் க்கு இங்கிலீஷ் எடுக்குற டீச்சரை வரச் சொல்லுங்க!'' என்று சொல்லியனுப்ப... ஆங்கில ஆசிரியர் பயந்தபடியே வந்து நின்றார்.

''உங்களுக்குக் கல்யாணம் ஆகிடுச்சா... எத்தனை குழந்தைங்க..?'' என்று கலெக்டர் கேட்டார்.


''ஆகிடுச்சு சார்... ரெண்டு குழந்தைங்க..'' - இது இங்கிலீஷ் ஆசிரியர்.

''எங்க படிக்கிறாங்க..?'' - கலெக்டர்.

ஒரு தனியார் பள்ளியின் பெயரைச் சொன்னார் அந்த ஆசிரியர்.

''நீங்க இப்படி பாடம் சொல்லிக் கொடுத்தா... நாளைக்கு இந்தக் குழந்தைங்க படிச்சுட்டு வரும்போது, டவுன்ல தனியார் பள்ளியில ஆங்கில வழியில் படிச்சு வர்ற உங்க குழந்தைங்களோட எப்படிப் போட்டிபோட முடியும், சொல்லுங்க..? கொஞ்சமாவது அக்கறையோட சொல்லிக் கொடுங்க. மறுபடியும் எப்ப வேணும்னாலும் ஸ்கூலுக்கு வருவேன். அப்போ இவங்க ஆங்கிலத்தை தெளிவா படிக்கணும். இல்லைன்னா, உங்க மேல நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும்!'' என எச்சரித்தார்.







அடுத்து மூன்றாம் வகுப் க்குள் நுழைந்தார். அங்கிருந்த குழந்தைகளைப் பார்த்து, ''சுபாஷ் சந்திரபோஸ் யாருன்னு

சொல்லுங்க பார்க்கலாம்...'' என்று கேட்டார்.

எந்த குழந்தைக்கும் தெரியவில்லை. ''காமராஜரை யாருக்குத் தெரியும்?'' என்று அடுத்த கேள்வியைக் கேட்டார். அதற்கும் பதில் இல்லை.

''விஜய் யாரு தெரியுமா?'' என்று கேட்டதுதான் தாமதம். ஒரு மாணவன் எழுந்து, ''சார், விஜய் சினிமாவுல நடிக்கிறாரு. இப்போ 'வேட்டைக்காரன்'ல நடிச்சிருக்காரு! நான் அடிச்சா தாங்க மாட்டா.. நாலு மாசம் தூங்க மாட்டேனு பாடுவாரு...'' என்று சொல்லவும், கலெக்டர் சிரித்துவிட்டார்.

அந்த வகுப் ஆசிரியரைக் கூப்பிட்டு, ''கிளாஸ் ரூம்ல தலைவர்களோட படங்களை மாட்டி வையுங்க. 'அவங்க யாரு..? என்னவெல்லாம் செஞ்சாங்க'ன்னு சொல்லிக் கொடுங்க. அவங்கதானே நம்ம நாட்டின் நிஜமான ஹீரோக்கள். நீங்கள் அவங்களைப் பத்தி சொல்லிக் கொடுக்காத வரைக்கும் ள்ளைங்க இப்படித்தான் இருப்பாங்க...'' என்று சொல்ல... ஆசிரியர் தலையாட்டினார்.



அங்கிருந்து ராசி ரம் நோக்கி கார் றப்பட்டது.

ராசி ரம் து பஸ் ஸ்டாண்டுக்கு அருகில் ஒன்வேயில் கார் போகும்போது, எதிரில் தனியார் பேருந்து ஒன்று அதிவேகத்தில் வந்தது. காரை நிறுத்தச் சொல்லி அந்த பேருந்தை வழிமறித்தார் கலெக்டர். பஸ்ஸுக்குள் ஏறிய கலெக்டர், "நோ என்ட்ரியில எதுக்கு தம்பி இவ்வளவு வேகமா ஓட்டிக்கிட்டு வர்ற..? எதிர்ல வர்றவங்க கதி என்னாகுறது... உன் டிரைவிங் லைசன்ஸை எடு..?" என்று கலெக்டர் கேட்கவும், ஆடிப்போனார் பஸ் டிரைவர்

"சார் லேட்டாயிடுச்சு. அதான் வந்துட்டேன். மன்னிச்சிடுங்க சார்... டிரைவிங் லைசன்ஸ் வீட்டுல இருக்கு..." என்று மென்று முழுங்கினார். போனை எடுத்த கலெக்டர், வட்டாரப் போக்குவரத்து அலுவலரை கூப்பிட்டார். அடுத்த பத்து நிமிடத்தில் அவர் வந்து சேர, "இந்த பஸ் ஓவர் ஸ்பீடு. நோ என்ட்ரியில வந்திருக்கு. இவருகிட்ட லைசன்ஸ் இல்ல. உடனே நடவடிக்கை எடுங்க" என்று உத்தரவு இட்டார்.

ரவுண்ட் அப் முடித்துக்கொண்டு நாங்கள் கிளம்பியபோது சகாயம் சொன்ன வார்த்தைகள் இன்னும் என் மனதில் நிழலாடுகிறது. "பொதுமக்களின் குறைகளைத் தீர்த்து வைக்கத்தான் கலெக்டராகிய நான் இருக்கிறேன். என் மக்களுக்குப் பிரச்னை என்றால் நான்தான் முதல் ஆளாக வந்து நிற்க வேண்டும். மக்களுக்கு எந்தக் குறை என்றாலும் எந்த நேரத்திலும் என்னைத் தேடி வரலாம். நானும் அவர்களைத் தேடிப் போகிறேன். நேரில் வர வேண்டும் என்ற அவசியம் இல்லை. என் செல்போனுக்கு ஒரு தகவல் சொன்னால் போதும் நான் நிச்சயம் நடவடிக்கை எடுப்பேன்" என்றார்.



போலீஸ், வாகன சோதனைகளில் ஈடுபடுவதை சர்வ சாதாரணமாக எல்லோருமே பார்த்திருப்போம். ராத்திரி நேரத்தில் கலெக்டர் வாகன சோதனையில் ஈடுபடுவதை எங்கும் பார்த்திருக்க முடியாது. நான் நாமக்கல்லில் பார்த்தேன். தன் அலுவலக வேலைகளை முடித்துக்கொண்டு இரவில் தினமும் தன் டிரைவர் மற்றும் உதவியாளர் ஒருவரை அழைத்துக்கொண்டு நாமக்கல் மாவட்டத்தில் எங்காவது ஒரு சாலையில் கலெக்டர் சகாயத்தின் கார் நிற்கும். அந்த வழியாக வரும் வாகனங்களை நிறுத்தி சோதனை செய்வார்.

‘‘ராசி ரம் பக்கத்துல ஒரு கல்லூரி நிகழ்ச்சிக்காக காரில் சென்று கொண்டிருந்தேன். இரண்டு இளைஞர்கள் தடுமாறிய படி எங்களது காரை முந்திச் சென்றனர். அவர்களை விரட்டிப் பிடித்து விசாரித்தபோது இருவரும் குடி போதையில் இருந்தனர்

‘நீங்கள் யார்.. எதற்காக எங்களை நிறுத்துகிறீர்கள்?’ என்று கேட்டார்கள். ‘என் பெயர் சகாயம். நான் இந்த மாவட்டத்தின் ஆட்சியராக இருக்கிறேன். நீங்கள் இப்படி குடித்துவிட்டு பைக் ஓட்டி வருவது சரியல்ல... உங்கள் ஓட்டுனர் உரிமத்தைக் காட்டுங்கள்’ என்றேன். அந்த இளைஞரிடம் ஓட்டுனர் உரிமம் இல்லை. இருவரும் சாலை ஓரத்தில் வண்டியை நிறுத்திவிட்டு தங்களுக்குள்

எதோ பேசிக்கொண்டார்கள். பிறகு என்னிடம் வந்தார்கள். 'சார் இந்த நூறு ரூபாயை வெச்சுகிட்டு எங்களை விட்டுடுங்க...' என்று ஒரு நூறு ரூபாய் தாளை என்னிடம் நீட்டினார்கள். எனக்கு சிரிப் தான் வந்தது.

என் தேசத்து இளைஞன் குடி போதையில் இருந்தால்கூட தப் செய்துவிட்டு அதிகாரிக்கு லஞ்சம் கொடுத்தால் தப்பித்துக் கொள்ளலாம் என்பதைத் தெளிவாகத் தெரிந்து வைத்திருக்கிறான் என்பதை நினைத்து வருத்தமாக இருந்தது. காவல் துறைக்கு உடனடியாக தகவல் சொல்லி, அந்த இளைஞர் மீது வழக்குப் பதிவுசெய்யச் சொன்னேன்" என்று ஒரு சம்பவத்தை நினைவுகூர்கிறார் சகாயம்.

இவர்தானே மக்களுக்கான அதிகாரி!

# 8

## நிஜமான சந்தோஷம்!

மதுரையில் ஒன்பது லட்ச ரூபாய் மதிப்பில் எல்.ஐ.சி. ஹவுசிங் லோனில் ஒரு வீடு. பேங்க் பேலன்ஸ் 7,172 ரூபாய் என பகிரங்கமாகத் தனது சொத்துப் பட்டியலை வெளியிட்டவர் சகாயம். இந்தியாவில் உள்ள ஐ.ஏ.எஸ். அதிகாரிகளில் முதலில் சொத்துப் பட்டியலை வெளியிட்ட பெருமைக்கு உரியவர் சகாயம். நாமக்கல்லில் கலெக்டராக இருந்த சமயத்தில்தான் தனது சொத்துப் பட்டியலை வெளியிட்டு ஒட்டுமொத்த இந்தியாவையே திரும்பிப்பார்க்க வைத்தார் சகாயம். இந்த சமயத்தில் ஆனந்த விகடன் பேட்டிக்காக அவரை சந்திக்க சென்றிருந்தேன். ஒரு நாள் முழுக்க சகாயத்துடன் இருந்தேன். பல்வேறு விஷயங்களை அந்தத் தருணத்தில் பேசினோம்.

சகாயத்தின் பேட்டி விகடனில் வெளியானது. சில வாரங்களுக்குப் பிறகு சகாயத்துடன் பேசியபோது, "நேரம் கிடைத்தால் அலுவலகத்துக்கு வாங்க ராஜா... எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. அதை உங்களிடம் காட்ட வேண்டும்" என்று அழைத்தார். நானும் சென்றேன். தனது மேஜையில் இருந்து ஒரு கடிதத்தை எடுத்து என்னிடம் கொடுத்தார் சகாயம். திருப்பூர் மாவட்டத்தில் ஊத்துக்குளி விநாயகா தெருவில் வசிக்கின்ற அழகேஸ்வரி என்பவருடைய மகன் ராகுல் என்ற பத்தாம் வகுப் மாணவன் எழுதிய கடிதம் அது. சகாயத்தைப் பார்க்க விரும் வதாக உருக்கமாக எழுதியிருந்தான் அந்த மாணவன்.



கடிதத்தைப் படித்துவிட்டு நிமிர்ந்த என்னைப் பார்த்து சகாயம் சொன்னார்... "நிச்சயம் அந்த சிறுவனை ஒரு நாள் நான் சந்திப்பேன். அவனை சந்திக்க நானும் ஆர்வமாக இருக்கிறேன். எதிர்கால இந்தியாவின் நம்பிக்கைகளான, இப்படிப்பட்ட இளம் உள்ளங்களில் நேர்மை வித்துக்களை விதைக்க நானும் ஒரு காரணமாக இருந்திருக்கிறேன் என்பதை எண்ணுகிறபோது நேர்மை வாழ்வு கொடுக்கும் நெருக்கடியான சூழல் மறந்து மன நிறைவும், மகிழ்ச்சியும் ஏற்படுகின்றன. அதுதானே நிஜமான சந்தோஷம்.

அடுத்து சகாயம் எடுத்த ஒரு ஆக்ஷன் ஒட்டுமொத்த மனிதாபிமானத்தின் உச்சம். தமிழ்நாட்டு மக்கள் அத்தனை பேரையும் திரும்பிப்பார்க்க வைத்த நிகழ்வு அது.

பெற்றோரை கவனிக்காமல்விடும் பிள்ளைகள் மீது நடவடிக்கை எடுக்க, 'பெற்றோர் மற்றும் முதியோர் வாழ்க்கைப் பொருளுதவிச் சட்டம்' ஒன்றை 2007-ம் ஆண்டு மத்திய அரசு கொண்டுவந்தது. இந்தச் சட்டத்துக்கான முழு விதிமுறைகளையும் 2009-ம் ஆண்டு

இறுதியில் மத்திய அரசு வெளியிட்டது. அந்தச் சட்ட விதிமுறை, 'வயதான பெற்றோரைக் கவனிக்காமல்விடும் பிள்ளைகளைப்பற்றி பெற்றோர் கார் செய்தால், பிள்ளைகள் மீது வழக்குப் பதிவு செய்து கைதுசெய்யலாம்!' என்று வழிகாட்டியது. இந்தச் சட்டத்தைப்பற்றி அப்போது மக்களுக்குத் தெரியாது. தமிழ் நாட்டில் முதன்முதலில் அந்தச் சட்டம் பாய்ந்தது நாமக்கல் மாவட்டத்தில். அப்பாவைத் தவிக்கவிட்ட மகன் மீது நடவடிக்கை எடுத்தது கலெக்டர் சகாயம்.

திருச்செங்கோடு பக்கம் சூரியம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்தவர் மாணிக்க முதலியார். இவருக்கு வசந்தா, சுசீலா என்று இரண்டு மகள்கள்; சாமிநாதன் என்று ஒரு மகன். மகள்கள் திருமணமாகிப் போய்விட... மகன் சாமிநாதனின் குடும்பத்தோடு வசித்து வந்திருக்கிறார் மாணிக்கம். இந்த நிலையில், 'மகன் சாமிநாதன் எனக்கு சாப்பாடுகூடப் போடாமல் கொடுமைப்படுத்துகிறார்' என கலெக்டரிடம் குறை தீர்க்கும் கூட்டத்தில் சொல்லி அழுதார். அடுத்த சில மணி நேரத்தில் அவரது மகன் சாமிநாதன் கைது செய்யப் பட்டார்

அந்த நேரத்தில் கலெக்டர் சகாயம் சொன்னது இதுதான்... "இந்த அவசர உலகத்தில் பெத்தவங்களை கவனிக்கக்கூட பிள்ளைகளுக்கு நேரம் இல்லை. அதனால்தான் முதியோர் இல்லங்களும், ஆதரவற்றோர் இல்லங்களும் நாளுக்கு நாள் பெருகிக்கிட்டே இருக்கு. இதுக்கெல்லாம் கடிவாளம் போடத்தான் மத்திய அரசாங்கம் இப்படி ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்காங்க. இந்த சட்டத்தைப்பற்றி பொது மக்களுக்கு இன்னும் சரியான விழிப் உணர்வு இல்லை. தமிழ்நாட்டில் இந்தச் சட்டத்தில் பதிவு செய்யப்பட்ட முதல் வழக்கு இதுதான். இதுவே கடைசி வழக்காகவும் இருக்கணும் என்பதுதான் என் ஆசை! சமூக நலத் துறை மூலமாக நாமக்கல் மாவட்டத்தில் எவ்வளவு பெற்றோர்கள் தனியாக இருக்காங்க... அதுல எவ்வளவு பேர் பிள்ளைகளின் உதவி இல்லாமல் இருக்காங்க எனப் பட்டியல் எடுக்கச் சொல்லி இருக்கேன். பெத்தவங்களுக்கு எந்த உதவியும் செய்யாமல் இருப்பவர்களை அழைத்துப் பேச இருக்கிறேன். என்னோட நோக்கம் பிள்ளைகளைக் கைதுசெய்ய வேண்டும் என்பது இல்லை. அவர்கள் மாற வேண்டும். பெற்றோரைப் பாதுகாக்க வேண்டும் என்துதான்! நாளைக்கு இதே முதுமை நமக்கும் வரும் என்பதை ஒரு நிமிஷம் நினைச்சுப் பார்த்தாலே எல்லாப்

பிள்ளைகளும் மாறிடுவாங்க! ” என்றார் நம்பிக்கையோடு.

வேலைக்கு சேர்ந்த நாள் முதல் தன் அம்மாவுக்கு மாதம் தோறும் மணியார்டரில் பணம் அனுப் வதை வழக்கமாக வைத்திருந்தார் சகாயம். பணத்தை வாங்கிக்கொண்டு அக்னாலெட்ஜ்மென்டில் அவரது அம்மா கைரேகை வைத்து அது திரும்பிவரும். அவற்றையெல்லாம் பொக்கிஷமாக பாதுகாத்து வைத்திருக்கிறார் சகாயம்.

@tamilbooksworld

9

# தப் க் கணக்கு!

மக்கள் மத்தியில் நாளுக்கு நாள் சகாயத்துக்கான மதிப் ம் மரியாதையும் கூடிக்கொண்டே போனது. ஆனால் அதிகாரிகள் வட்டாரத்திலோ அவருக்கான எதிர்ப் கள் அதிகமானது. அதற்கு நாமக்கல் மாவட்டத்தில் அவர் போட்ட ஓர் உத்தரவு மிக முக்கியமான காரணமாக அமைந்தது.

''வி.ஏ.ஓ. என்பவர் கிராம நிர்வாகத்தை கவனிக்க வேண்டியவர். ஒரு கிராமத்தில் மக்களுக்கு என்ன தேவை... அவர்களின் பிரச்னை என்ன என்பதைக் கண்காணித்து அரசாங்கத்துக்கு தகவல் சொல்லும் கடமை கிராம நிர்வாக அலுவலருக்குத்தான் உண்டு. அதனால் ஒவ்வொரு கிராம நிர்வாக அலுவலரும் அவருக்குப் பணி ஒதுக்கப்பட்ட கிராமத்திலேயே தங்க வேண்டும். நான் எப்போது வேண்டுமானாலும் கிராமங்களுக்கு வருவேன். அப்போது கிராமத்தில் இல்லாத அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுப்பேன்'' என்று உத்தரவு இட்டார் சகாயம். இது கிராம நிர்வாக அலுவலர்கள் மத்தியில் மிகப் பெரிய கொந்தளிப்பை உண்டாக்கியது. அதே நேரத்தில் மக்கள் மத்தியில் மாபெரும் ஆதரவைப் பெற்றது. சகாயத்துக்கு எதிராகக் கிராம நிர்வாக அலுவலர்கள் போர்க்கொடி தூக்கினார்கள். போராட்டங்கள் நடத்தினார்கள். ஆனால் சகாயம் அவர்களுக்கு வளைந்து கொடுக்கவில்லை.







"நீங்க... நான் எல்லோருமே மக்களுக்குப் பணியாற்ற அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டவர்கள். அதற்காகத்தான் நமக்கு சம்பளம் கொடுக்கிறார்கள். அந்த வேலையை சரியாக செய்ய வேண்டும். அப்படி செய்ய விருப்பம் இல்லாதவர்கள் தாராளமாகப் போய்விடுங்கள்..." என்று உறுதியாக இருந்தார். சில மாதங்களுக்குப் பிறகு டெல்லி அருகே உள்ள மசூரிக்கு 54 நாட்கள் பயிற்சிக்காக சகாயம் சென்றிருந்தார். அவர் அங்கே பயிற்சியில் இருந்த சமயத்தில், 'நாமக்கல் கலெக்டராக இருந்த சகாயம் அங்கிருந்து மாற்றப்பட்டு காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்படுகிறார்' என்று அறிவித்தது தமிழக அரசு. சகாயம் மாற்றப்பட்டதற்கு எதிர்ப் தெரிவித்து, பொதுமக்களும், பல்வேறு சமூக நல இயக்கங்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர். சிலர் தீக்குளிப் முயற்சியிலும் ஈடுபட்டனர். நாட்கள் நகர்ந்தன. பயிற்சியை முடித்துவிட்டு சகாயம் தமிழ்நாட்டுக்குத் திரும்பினார்.

"54 நாட்கள் பயிற்சியை நான் முடித்துவிட்டு 13.11.2010 அன்று திரும்பி சென்னைக்கு வந்தேன். விமான நிலையத்தில் என்னை அழைத்துச் செல்ல எந்த வாகனமும் வரவில்லை. அலுவலர் எவரும் வரவில்லை. 54 நாட்களுக்கு முன்பாக நாமக்கல் மாவட்டத்தில் இருந்து அரசு வாகனத்தில் அலுவலர்கள் எல்லோரும் வந்து என்னை அனுப்பி வைத்தார்கள். வரவேற்க எவரும் இல்லை. என்னுடைய நண்பர் ஒருவர் மட்டும் விமான நிலையம் வந்திருந்தார். என்னை அவருடைய வாகனத்தில் அழைத்து வந்தார்.

அவருடன் வரும்போது, 'நேர்மையாக இருந்ததற்கு

இப்படியெல்லாம் தண்டனை கொடுக்கிறார்களே, இந்த தேசத்தில் நேர்மைக்கு இவ்வளவு மதிப் தானா?' மனம் வருந்திப் பேசினார் அந்த நண்பர். அதற்கு நான் சொன்னேன், அப்படி மனம் நொந்து பேச வேண்டாம் நேர்மை என்பது உன்னதமான உயர்ந்த லட்சியம்; அது கடினமானதுதான்; அதை மனநிறைவோடு ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்றேன்.



'என்னமோ போங்க...' என்று அவர் சமாதானம் ஆகவே இல்லை. 150 ஆண்டு காலத் தந்தி சேவை நிறுத்தப்படுகிறது என்று அறிவிப் வந்தது. நான் எத்தனையோ தந்திகள் கொடுத்திருக்கிறேன். எனக்கும் சில தந்திகள் வந்திருக்கின்றன. செல்போன் போன்ற தகவல் தொடர் சாதனங்கள் வந்தபிறகு தந்தியின் பயன்பாடு குறைந்துவிட்டது. நான் டெல்லியில் பணியாற்றியபோது என் அண்ணன் , 'நீ டெப்டி கலெக்டராகத் தேர்வாகிவிட்டாய்' என்று அனுப்பிய தந்தி இன்னும் என் நினைவில் இருக்கிறது. இந்த இடத்தில் தந்தி பற்றி சொல்ல வேண்டிய அவசியம் என்ன வந்தது என்று கேட்கலாம். சொல்கிறேன்.

தந்தி சேவையின் கடைசி நாள் அன்று எனக்கு ஒரு தந்தி வந்தது. அதை அனுப்பியவர் இந்திரா பிரியதர்ஷினி என்பவர். குரூப் 2-தேர்வில் அண்மையில் தேர்ச்சியடைந்த பெண். 'நானும்

உங்களைப் போல நேர்மையாக இருப்பேன். எனக்கு மட்டுமல்ல... நேர்மைக்கு நீங்கள் ரோல் மாடல்' என்று அதில் குறிப்பிட்டிருந்தார். கடைசியாக தந்தி அனுப்ப வேண்டும் என்று முடிவெடுத்ததும் ஒவ்வொருவரும் யார் யாருக்கோ தந்தி அனுப்பிய நேரத்தில் முகம் தெரியாத ஒரு பெண் எனக்கு அனுப்பிய தந்தியை நினைத்து வியந்தேன். நேர்மையை ஆராதிக்கக்கூடிய மனிதர்களும் இந்த உலகத்தில் இருக்கிறார்கள் என்பதை எல்லோருக்கும் உணர்த்தியது அந்த சம்பவம்!

இதுதானே நேர்மைக்கு கிடைத்த அங்கீகாரம். அந்த அங்கீகாரம்தான் எத்தனை இடையூறுகள் வந்தாலும் என்னைத் தொடர்ந்து பயணிக்க வைக்கிறது." என்று சொன்னார் சகாயம்.

இந்த சூழ்நிலையில் அப்போது தமிழக முதல்வராக இருந்த கருணாநிதிக்கு ஒரு கடிதம் எழுதினார் சகாயம். அந்த கடிதத்தில், '21 ஆண்டு கால அரசுப் பணியில் எங்காவது ஓர் இடத்தில் ஒரு சிறு ஊழல் செய்து இருந்தாலோ, ஒரு ரூபாய் லஞ்சம் வாங்கி இருந்தாலோ, என்னைப் பொதுமக்கள் முன்னிலையில் தூக்கில் போடலாம். நான் ஏற்றுக்கொண்ட பணியில் இன்றுவரை எள் முனையளவும் தடம் மாறாமல் நேர்மையுடன் பயணித்துக்கொண்டு இருக்கிறேன்" என்று அதில் குறிப்பிட்டிருந்தார்.

மாற்றம் ஒன்றுதான் மாறாதது என்று சொல்வார்கள். சகாயமும் அப்படித்தானே!

# 10

## ஒன் மேன் ஆர்மி சகாயம்!

2011-ம் ஆண்டு தமிழக சட்டமன்றத் தேர்தல். அதுவரை மதுரையில் அழகிரி சொன்னது மட்டுமே நடக்கும் என்று இருந்த காலம். அந்த நேரத்தில்தான் மதுரை மாவட்ட ஆட்சியராகப் பொறுப்பேற்றார் சகாயம். தேர்தலை நேர்மையாக நடத்த வேண்டும் என்பதில் கண்கொத்திப் பாம்பாக இருந்தார். தேர்தல் விதிமுறைகளை மீறியவர்களை கட்சி பாகுபாடு பார்க்காமல் கைது செய்ய உத்தரவு இட்டார். 'ஒரு கட்சியைச் சேர்ந்தவர்போல செயல்படுகிறார் சகாயம்' என்று அழகிரி கொந்தளித்தார். வழக்கும் தொடர்ந்தார். ஆனால், சகாயம் தன் நேர்மையில் இருந்து தடம் மாறவில்லை.

மதுரை மக்கள் ஆச்சர்யத்துடன் சகாயத்தைப் பார்த்தார்கள். இன்னும் சிலரோ, 'மதுரையைக் காக்க மீனாட்சி அம்மன்தான் சகாயத்தின் உருவில் வந்திருக்கிறது' என்று வாய்விட்டுப் பாராட்டினார்கள். தேர்தல் நடைபெற்ற சமயத்தில் மதுரை மாவட்டத்தில் பல பூத்களுக்கு சகாயம் நேரில் சென்றார். வாக்களிக்க வரிசையில் காத்திருந்த இளைஞர்கள் சகாயத்தைப் பார்த்ததும், விரைப்பாக நின்று சல்யூட் அடித்தனர். பெண்களோ, 'இவருதான் நமக்கெல்லாம் நல்லது பண்ண வந்திருக்கிற கலெக்டர்...' என்று தங்களுக்குள் பேசிக்கொண்டனர்.



'சட்டத்தின் ஆட்சியை சரியாக செய்து வருகிறார் சகாயம். அவரைப் பாராட்ட வேண்டும். எந்த காலத்திலும் அவருக்கு யாரும் தொந்தரவு கொடுக்கக்கூடாது' என்று பகிரங்கமாகவே பேசினார் மதுரை ஆதீனம்.

தேர்தல் முடிந்தது ஆட்சி மாறியது. சகாயத்துக்கு அடுத்த சவாலும் வந்தது. 'மதுரை மாவட்டம் மேலூர், கீழையூர், கீழவளவு, திருமோகூர் பகுதிகளில் சுமார் 56 கிரானைட் குவாரிகள் செயல்படுகின்றன. இவற்றில் அரசு குவாரிகளை விடவும் தனியார் பட்டா நிலத்தில் இயங்கும் குவாரிகளே அதிகம். இந்த குவாரிகளால் வெளியூர்வாசிகள் சிலர் கோடீஸ்வரர்கள் ஆனார்கள் என்றால், உள்ளூர் மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தைத் தொலைத்து நிற்கிறார்கள். தனியார் பட்டா நிலங்களில் குவாரி நடத்துபவர்கள், அருகிலுள்ள புறம்போக்கு நிலங்களையும் வளைத்து, கோடிகளைச் சம்பாதிப்பது அதிகாரிகளுக்குத் தெரிந்தே நடக்கிறது. இதைக் கண்டும் காணாமல் இருப்பதற்காக இங்குள்ள கிரானைட் கம்பெனிகள் சில, அரசுத் துறையினருக்கு தனியாக மாத

சம்பளமே வழங்குகிறார்களாம்.

இதனால், இந்தப் பகுதிகளில் வி.ஏ.ஓ. வேலைக்கு வருவதற்கே சில லட்சங்களைக் கப்பம் கட்டுகிறார்கள். அந்த அளவுக்குக் காஸ்ட்லியான ஏரியா. இந்த முறைகேடுகள் குறித்து அவ்வப்போது கார்களும் போராட்டங்களும் வெடித்தாலும், அதிகாரிகள் அப்படியே அமுக்கிவிடுவார்கள். கனிமத்தைச் சுரண்டும் கும்பல், அருகிலுள்ள நீர் ஆதாரங் களையும் விளை நிலங்களையும் பாழ்படுத்துவதால் இந்தப் பகுதியில் விவசாயமும் படுத்துவிட்டது. நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்கள் என்று கடைசி நம்பிக்கையுடன் காத்திருக்கிறோம்.' - இப்படி ஒரு கடிதம் சகாயத்துக்குப் போனது. சாட்டையை எடுத்தார் சகாயம்.



ஒரு தனியார் நிறுவனம் அரசியல் பிரமுகர்கள் சிலருடன் நெருக்கத்தில் இருப்பதும், அந்த நிறுவனமே முறைகேடாக பல குவாரிகளை நடத்தி வருவதையும் தன் விசாரணையில் கண்டுபிடித்தார் சகாயம். 'வேண்டாம் சார்... அவங்க செல்வாக்கான ஆளுங்க. அவங்க மேல கை வெச்சா சிக்கல் வரும்..' என்று சிலர் சகாயத்தை எச்சரித்தனர். ஆனாலும், கிரானைட் குவாரிகளைக் கிண்டிக் கிழங்கெடுக்க ஆரம்பித்தவர், தன்னிடம் கார் கொடுத்தவர்களிடம், 'என்னை ரொம்ப நாளைக்கு இங்கே இருக்கவிட மாட்டாங்கப்பா...' என்று சொல்லி விட்டுதான் மளமளவெனக் காரியத்தில் இறங்கினார்

சம்பந்தப்பட்ட அந்த குவாரிக்கு விசிட் போனவர், ‘கண்மாய், குளங்களைத் தூர்த்து விவசாயிகளோட வாழ் வாதாரத்தையே பாழாக்கிட்டீங்களே... இது சுதந்திர நாடுதானா?’ என அங்கே இருந்தவர்களிடம் எகிறினார். அதே வேகத்துடன், அந்தப் பிரபல குவாரி நிர்வாகம், சட்ட விரோதமாக கிரானைட் கற்களை வெட்டி எடுத்து அரசுக்கு வர வேண்டிய பணத்தை எப்படி எல்லாம் சுருட்டி இருக்கிறது என்பதைப் ள்ளி விவரங்களுடன் அறிக்கை தயாரித்தார்.

அவர் அறிக்கை தயாரித்துக்கொண்டிருந்த நேரத்தில், சென்னையில் உள்ள உயரதிகாரி ஒருவரிடம் இருந்து, ‘நீங்க உடனே கிளம்பி சென்னை வாங்க...’ என்று அழைப் வந்தது. சென்னைக்குப் றப்பட்டார் சகாயம். அந்த அதிகாரி ஏதேதோ பேசிவிட்டு கிளம் ம் நேரத்தில், ‘நீங்கள் தான் ஒன் மேன் ஆர்மியாச்சே சகாயம். எங்கே இருந்தாலும் தனி ஆளாப் போராடி ஷைன் பண்ணுவீங்க... ஆல் தி பெஸ்ட்...’ என்று சொல்லி வழியனுப்பி வைத்தாராம். தலைமைச் செயலகத்தில் இருந்து கிளம்பிய சகாயம் சென்னை ஏர்போர்ட்டுக்கு வருவதற்குள் டிரான்ஸ்ஃபர் உத்தரவு வெளிவந்துவிட்டது. கோ-ஆப்டெக்ஸ் நிர்வாக இயக்குனராக மாற்றம் செய்யப்பட்டார்.

சகாயம் மதுரையில் கிளம் வதற்கு முன் தான் தயார் செய்த அறிக்கையை ஒரு கடிதமாக தமிழக அரசின் தொழில் துறை முதன்மை செயலாளருக்கு அனுப்பிவிட்டுத்தான் றப்பட்டார்.

அந்தக் கடிதம் இதுதான்.......

“மதிப் க்கு உரிய தொழில் துறை முதன்மை செயலர் அவர்களுக்கு, வணக்கம்.

மதுரை மாவட்டத்தில் மேலூர் தாலுகாவில் அரசு அனுமதி பெற்று குவாரிகள் நடத்தி வரும் பலர் அரசு றம்போக்கு, பொதுப் பாதைகள், கண்மாய்கள், குளங்கள், பஞ்சமி நிலங்களை ஆக்கிரமிப் செய்துள்ளதாகவும், அனுமதியின்றி கிரானைட் கற்களை வெட்டி எடுத்து கடத்தி விற்பனை செய்துள்ளதாகவும் எனக்குப் கார்கள் வந்தன.

இதனால் தமிழக அரசுக்கு சுமார் ரூ. 16 ஆயிரம் கோடி வரை இழப் ஏற்பட்டுள்ளதாகவும் அதில் கூறப்பட்டு இருந்தது. இதன் அடிப்படையில் மதுரை மாவட்ட ஆட்சியர் என்ற முறையில் அதுகுறித்து நான் விசாரித்தேன். எனது தலைமையில் துணை

கலெக்டர்கள், தாசில்தார்கள் என்ற நிலையில் குழுக்கள் அமைக்கப்பட்டு ஆய்வுகள் நடத்தப் பட்டன.

கிரானைட் கற்கள் கடத்தல் பல ஆண்டுகளாக நடந்து வருகிறது என்பது தெளிவாகிறது. மேலூர் பகுதியில் குளங்கள் ஆக்கிரமிப் செய்யப்பட்டு இருந்தன. அதனை உடனே அகற்ற அதிகாரிகளுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. மேலும் சில பகுதிகளில் ஆய்வு செய்தபோது அனுமதி இல்லாமல் கிரானைட் கற்களை வெட்டி எடுத்துள்ளதும் கண்டுபிடிக்கப்பட்டது.

ஆனால், தொடர்ந்து அறிவுறுத்தியும் கனிம வளத் துறை மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகள் சரியான நடவடிக்கை எடுக்கவில்லை. இதற்கு கிரானைட் உரிமையாளர்கள் மூலம் அவர்களுக்கு ஆபத்து ஏற்படலாம் என்பதும் ஒரு காரணம். அத்துடன் அதிகாரிகளுக்கு பெருமளவில் நிதி ஆதாயமும் கிடைத்துள்ளது. குறிப்பாக வருவாய்த் துறையில் கீழ் நிலையில் பணியில் இருப்போரும், கனிம வளத் துறை அலுவலர்களும் பெரும் பலனை அடைந்திருக்கிறார்கள்.

அதற்கு எதிராக நான் நடவடிக்கை எடுக்க நினைத்தபோது கனமவளத் துறையினரிடம் இருந்து முழுமையான தகவல்களைப் பெற முடியவில்லை. அத்துடன் நான் தணிக்கைக்கு செல்லும் விவரங்களை கிரானைட் உரிமையாளர்களுக்கு சில அலுவலர்கள் முன்னதாகவே தெரிவிக்கும் நிலையும் இருந்தது. கனிம வளம் என்பது தேசத்தின் சொத்து. அதனை தனி நபர்களும், நிறுவனங்களும் சுரண்டுவதை அனுமதிக்க முடியாது.



மதுரை ஆதீனம்

குறிப்பாக, மேலூர் பகுதியில் உள்ள ஆயிரக்கணக்கான ஏழை விவசாயிகளின் வாழ்வாதாரத்தை அழிக்கும் வகையில் இது

நடந்துள்ளது. இந்த நிலை தொடராமல் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.



பி.ஆர். பழனிசாமி

அரசுக்குக் கட்டணம் செலுத்தாமல் எடுக்கப்பட்ட கற்கள் மற்றும் திருடப்பட்ட கற்களை கைப்பற்றி பொது ஏலம் விட வேண்டும். எதிர்காலத்தில் தமிழ்நாடு கனிம வள நிறுவனமே கிரானைட் கற்களை எடுத்து விற்பனை செய்ய வேண்டும். நேர்மையான அதிகாரிகள் கொண்ட பறக்கும் படை அமைத்து கிரானைட் குவாரிகளை சோதனை செய்ய வேண்டும்.'' என்று முடிந்தது அந்தக் கடிதம். இந்தக் கடிதம் முதல்வர் கவனத்துக்கும் போனது. அதன் பிறகு நடந்த அதிரடி ஆக்ஷனில்தான் பி.ஆர்.பி. கிரானைட் குவாரி உரிமையாளர் கைது செய்யப்பட்டார்.

மதுரையில் இருந்து சகாயம் மாற்றப்பட்டபோது பொதுமக்களும், சமூக ஆர்வலர்களும் கொந்தளித்தார்கள். சகாயம் மாற்றத்துக்கு எதிர்ப்  தெரிவித்து மதுரையில் ஆர்ப்பாட்டங்களும், போராட்டங்களும் நடந்தன. சகாயம் எந்த ஊருக்குப் போனாலும் அந்த ஊர் மக்களுக்குப் பிடித்த அதிகாரியாக மாறிவிடுவார் என்பதுதான் மதுரையிலும் நடந்தது. ஆனால் அவர் மாற்றத்தைப் பற்றி கவலைப்படவும் இல்லை. அதற்கு கருத்து தெரிவிக்கவும் இல்லை. அரசின் உத்தரவை ஏற்று கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் பொறுப்பேற்றார்.

# 'நெஞ்சமுண்டு நேர்மையுண்டு'

பாரதிராஜாவின் 'தமிழ்ச்செல்வன்' படத்தில் நேர்மையான கலெக்டராக நடித்திருப்பார் விஜயகாந்த். அரசியல்வாதிகளுக்கு வளைந்துகொடுக்காததால் ஒரு கலெக்டர் எப்படியெல்லாம் பந்தாடப்படுகிறார் என்பது அந்த படத்தில் அப்பட்டமாக காட்டப்பட்டிருக்கும். தமிழ்ச்செல்வனை எந்தத் துறைக்கு மாற்றினாலும் அந்தத் துறையில் நேர்மையாக நடப்பார். அங்கே நடக்கும் அநியாயங்களைத் தட்டிக்கேட்பார். அந்தப் படம் யாரை மனதில் வைத்து பாரதிராஜா இயக்கினார் என்பது தெரியாது. ஆனாலும், படம் முழுவதுமே சகாயத்தை நினைவுபடுத்தும்.

"ஊழலுக்கு எதிரான மாற்றம் உருவாகும் என நினைக் கிறீர்களா?" என்று சகாயத்திடம் கேட்டபோது அவர் சொன்னது இதுதான்...

"எதிர்காலத்தில் ஊழலுக்கு எதிராக மக்கள் ஒன்று திரள்வார்கள் என்ற நம்பிக்கை இப்போது ஏற்பட்டுள்ளது. ரட்சி, ள்ளியாகத்தான் தொடங்கும். நத்தையை விழுங்கியதும் ஜெல்லி மீனின் வயிற்றுக்குள் சென்ற நத்தை கொஞ்சம் கொஞ்சமாக ஜெல்லி மீனின் வயிற்றை அறுத்துக் கொண்டு எப்படி வெளியே வருமோ அதுபோன்று சமுதாயத்தை லஞ்சம் என்ற நத்தை கொஞ்சம் கொஞ்சமாக அறுத்துவிடும். அழைத்துவிடும். சமுதாயத்திலிருந்து லஞ்சம், ஊழலை அப் றப்படுத்துவது என்பது சாதாரண விஷயமல்ல. இதற்கு லஞ்சத்துக்கு எதிரான கருத்துக்களை மாணவர்கள், இளைஞர்களிடம் பரப்ப ஊழலுக்கு எதிரான இயக்கம் பாடுபட வேண்டும்."



மதுரையில் இருந்து மாற்றப்பட்ட சகாயம் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்துக்கு எம்.டி-யாகப் பொறுப்பேற்றார். அங்கும் தன் நேர்மை எனும் சாட்டையைச் சுழற்ற ஆரம்பித்தார். நஷ்டத்தில் இயங்கிவந்த கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் கோடிக்கணக்கில் லாபம் பார்க்க ஆரம்பித்தது. நெசவாளர் களுக்குப் பல  திய திட்டங்களை அறிமுகப்படுத்தினார்.

நெசவாளர் கிராமங்களுக்கு நேரில் சென்று அங்குள்ள நெசவாளர்களின் பிரச்னைகளை கேட்டறிந்தார். முசிறி அருகே ஒரு கிராமத்துக்கு அப்படி சென்றபோது அங்கே அவர் சந்தித்த ஒரு நெசவாளர், 'ஒரு நாளைக்கு ஒரு சேலை நெய்வோங்க.. அறுபது ரூபாய் கூலி கிடைக்கும்'' என்று சொல்ல... ஒரு நாளைக்கு அறுபது ரூபாயை வெச்சுட்டு என்ன செய்ய முடியும் என்று வேதனைப்பட்டவர், உடனடியாக நெசவாளர்களுக்கு 50 ரூபாய் கூலியை உயர்த்திக் கொடுக்க உத்தரவு இட்டார்.

''இன்னொரு நெசவாளி மாதத்தில் நான்கு நாட்கள் சமையல் செய்வதற்கு எடுபிடி வேலைக்குச் செல்வதாக சொன்னார். மனதுக்கு மிகவும் வேதனையாக இருந்தது. நெசவாளி என்பவன் ஒரு கலைஞன். எழுத்தாளரைப் போல, கவிஞரைப் போல ஆடைகளை உருவாக்கும் கலைஞன் அவன். சாதாரணமாக நான்கு வரிகளை எழுதினால்கூட சிலர் அதில் தங்கள் பெயரைப் போட்டுக்கொள்கிறார்கள். ஒரு சேலையை உருவாக்க அந்த நெசவாளி எவ்வளவு கஷ்டப்பட வேண்டி இருக்கும். ஆனால் அந்தச் சேலையை நெய்வதற்குள் நெசவாளி குறைந்தது 20 ஆயிரம் முறை கால்களை அசைக்கிறான். அந்த சேலையை உருவாக்கிய வனைப் பற்றி யாருக்கும் தெரியாமலேயே போய்விடுகிறது.

இனி அந்தக் குறை இருக்காது. கோ-ஆப்டெக்ஸ் மூலம்

விற்கப்படும் எல்லா சேலைகளிலும் அந்த சேலையை நெய்த நெசவாளியின் பெயர் மற்றும் கைப்படங்கள் அடங்கிய டேக் கண்டிப்பாக இணைக்கச் சொல்லியிருக்கிறேன். நெசவாளர்களுக்கு ஒரு நாளுக்கு குறைந்தது 200 ரூபாயாவது கூலி கிடைக்க ஏற்பாடுகளைச் செய்து வருகிறேன். அவர்கள் வாழ்வில் நிச்சயம் மாற்றங்களைக் கொண்டு வருவேன்'' என்று சொல்லும் சகாயம், ''நாம எந்த இடத்துல இருக்கிறோம் என்பது முக்கியம் அல்ல... இருக்கும் இடத்தில் சரியாக இருக்கிறோமா என்பதுதான் முக்கியம். நான் என் பணிகளைச் சரியாகவும் நேர்மையாகவும் செய்கிறேன்!'' என்கிறார்.

'வேட்டி தினம்' என்ற ஒன்றை அறிவித்தார். மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு கடிதம் எழுதி அந்த நாளில் அரசு ஊழியர்கள் வேட்டி அணிந்து அலுவலகம் வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இதற்கும் ஊழியர் மத்தியில் நல்ல வரவேற் .

கடந்த ஆண்டு சென்னையில் நடந்த த்தகக் திருவிழாவில் பேசுவதற்கு சகாயத்தை அழைத்து வரும் பொறுப் எனக்கு வழங்கப்பட்டது. அந்தக் கூட்டத்தில் 'நெஞ்சமுண்டு நேர்மையுண்டு' என்ற தலைப்பில் சகாயம் பேசினார் சகாயம் பேச ஆரம்பித்தபோது அந்த அரங்கத்தில் சொற்ப எண்ணிக்கையிலேயே மக்கள் கூட்டம் இருந்தது. சில நிமிடங்களில் அரங்கம் நிறைந்தது. அவர் பேசி முடிக்கும் வரை கூட்டத்தில் இருந்து ஒருவரும் நகரவில்லை.

அந்த விழாவில் சகாயம் பேசியது இதுதான்... ''நேர்மை என்றால் அது அரசு அலுவலர்களுக்கு மட்டுமான பண் என்றே பலரும் நினைக்கிறார்கள். முதல் குடிமகன் தொடங்கி சமுதாயத்தில் உள்ள கடைக்கோடி மனிதன் வரை அனைவருக்குமான பண் நேர்மை. இந்தியா இன்று பல துறைகளில் வளர்ச்சியை எட்டியுள்ளது. ஒரு பக்கம் சாலைகளும் மறுபக்கம் ஆலைகளும் பெருகிவிட்டன. என்ன இருந்து என்ன பயன்? நாட்டின் கடைக்கோடியில் உள்ள பாமரனுக்கு சுதந்திரத்தின் பலன் இன்னும் முழுமை யாகச் சென்று சேரவில்லையே! நாட்டின் சுதந்திரத்துக்காக எண்ணற்ற தலைவர்கள் அளப்பரிய தியாகங்களை செய்துள்ளனர். இந்த தேசத்தின் முதுகெலும் என்று மார்தட்டிக்கொள்ளும் விவசாயி விஷம் குடித்துச் சாகிறான் என்றால் நாம் பெற்ற சுதத்திரத்தால் என்ன பயன்?

நேர்மையாளர்கள்தான் வரலாற்றையே மாற்றியுள்ளதாக உலக சரித்திரம் சொல்கிறது. இன்றைய காலச் சூழலில் ஊழல்வாதிகள்,

லஞ்சம் பெறுவோர் மிகுந்த செல்வாக்குடனும் பண பலத்துடனும் இருக்கிறார்கள். எங்களைப்போல நேர்மையாக இருப்பவர்கள் உறவுகளை இழக்கிறார்கள். நண்பர்களை இழக்கிறார்கள். சக ஊழியர்களின் வெறுப் க்கு ஆளாகிறார்கள். இப்படி பலரும் நேர்மையாளர்களை வெறுத்தாலும் அடித்தட்டு மக்கள் எங்களை நேசிக்கிறார்கள். அங்கீகாரம் கொடுக்கிறார்கள். அதைப் பல சந்தர்ப்பங்களில் நான் உணர்ந்துள்ளேன்.





நேர்மையான தலைமுறை என்பது பள்ளிப் பருவத்தில் இருந்தே உருவாக்கப்பட வேண்டும். ஆசிரியர்கள்தான் இந்த சமூக மாற்றத்துக்கான கருவிகள். அவர்கள் நினைத்தால் மட்டும்தான் பொறுப் ள்ள நேர்மையான சமுதாயத்தை உருவாக்க முடியும்'' என்று பேசி முடிக்க... ஒட்டுமொத்த கூட்டமும் எழுந்து நின்று கைதட்டியது.

அங்கே கேட்ட ஒவ்வொரு கைதட்டலின் சப்தமும் ஊழலுக்கு எதிரான சரவெடி. நேர்மைக்கான வரவேற் .

# சவாலே சமாளி!

சகாயம் கொண்டு வந்த திட்டங்களில் ‘உழவன் உணவகம்’ என்பது மிகச் சிறந்த திட்டம். உழவர் சந்தைகளில் மாலை நேரத்தில் விவாசயிகளால் நடத்தப்படுவது இந்த உழவன் உணவகம். இங்கே கம் , சோளம், கேழ்வரகு என்று விதவிதமான தானியங்களால் கிராமத்து உணவுகள் மண் மணக்கத் தயாராகும். நாமக்கல்லில் சகாயம் கலெக்டராக இருந்தபோது அவர் கொண்டுவந்த திட்டம் இது. இந்த உழவன் உணவகத்தின் மூலம் விவசாயிகள் நல்ல பயனடைந்தனர். மக்களுக்குச் சுவையான பாரம்பரிய உணவு கிடைத்தது. விவசாயிகளுக்கும் லாபம் கிடைத்தது.

உழவன் உணவகம் என்ற எண்ணம் சகாயத்துக்கு எப்படி உருவானது?

‘‘நான் பள்ளிச் சிறுவனாக இருந்தபோது கோடை விடுமுறைக்கு செட்டிநாடு பகுதியில் திருமயத்துக்கு அருகே உள்ள கோட்டையூர் அற் த ரத்தில் உள்ள என் சின்னம்மா வீட்டுக்குச் செல்வேன். எங்கள் சின்னம்மா வீடுதான் அந்த ஊரிலே பெரிய மாடி வீடு. பெரிய வைக்கோல் போர், 100-க்கும் மேற்பட்ட மாடுகள், மாட்டு வண்டிகள், கூட்டு வண்டி என்று வளமான விவசாயக் குடும்பம் அவர்களுடையது. அங்கே வேலை செய்பவர்களுக்கு உணவு சமைப்பார்கள்.



கூட்டு வண்டியில பயணம் செய்வது அலாதியான சுகம். மாட்டின் சலங்கை சப்தம் மட்டும் கேட்கும். அந்த ஊருல இருந்து பக்கத்துல இருக்கும் கடியாபட்டிக்கு சினிமா பார்க்க கூட்டு வண்டியிலதான் கூட்டிட்டுப் போவாங்க. சவாலே சமாளி என்ற படத்தை நான் அந்த ஊருல இருக்கும் டூரிங் டாக்கீஸ்லதான் பார்த்தேன். எனக்கு மிகவும் பிடித்த படங்களில் அதுவும் ஒன்று.

சமீபத்தில் உடல் நலம் பாதிக்கப்பட்டு இருந்த என் சின்னம்மாவைப் பார்க்க அந்த கிராமத்துக்கு நான் போனேன். அங்கே எல்லாம் மாறியிருந்தது. நூற்றுக்கணக்கான மாடுகளில் ஒன்றுகூட இல்லை. வைக்கோல் போரும் இல்லை. கூட்டு வண்டியும் இல்லை. வேலை செய்பவர்களுக்கு சமையலும் நடக்கவில்லை. எப்படி இந்த நிலை வந்தது? நிறைய யோசித்துப் பார்த்தேன். விவசாயத்தை மட்டுமே நம்பி வாழும் மக்களின் நிலை இதுதான். விவசாய நிலங்கள் எல்லாம் வெறிச்சோடிப் போய்விட்டன. பல இடங்களில் விவசாய நிலங்கள் காங்கிரீட் காடுகளாக மாறிக்கொண்டு இருக்கின்றன. விவசாயம் இனி லாபம் தராத தொழில் என்று முடிவுக்கு வந்துவிட்டனர் கிராமத்து மனிதர்கள். அடுத்த தலைமுறை இந்தக் காட்டிலும் மேட்டிலும்

கிடந்து கஷ்டப் படக் கூடாது என்பது அவர்களின் எண்ணம். அடுத்த தலை முறைக்கு அந்த ஆர்வமும் இல்லை. ஊருக்கே உணவளித்து உருக்குலைந்துபோன என் விவசாயிக்கு உதவ வேண்டும் என யோசித்தபோது எனக்குள் தோன்றியதுதான் இந்த உழவன் உணவகம்.

நான் சந்திக்கும் மனிதர்களிடம் எல்லாம் நமக்கெல்லாம் உணவளிக்கும் தியாகி விவசாயி. அவர்களுக்கு வாய்ப் க் கிடைக்கும்போதெல்லாம் உதவுங்கள் என்று சொல்வேன்" என்கிறார்.

சகாயத்தின் மனிதாபிமானத்துக்கு பல உதாரணங்களைச் சொல்லலாம். அவரே சொல்லியிருக்கும் ஓர் உதாரணத்தை உங்களுடன் பகிர்ந்துகொள்கிறேன்.





"நான் சென்னையில் மாவட்ட வருவாய் அலுவலராக பணியாற்றிய காலம் அது. தியாகி பென்ஷன் கேட்டு வரும் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்ய ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கும். அந்தக் குழுவுக்கு நான் தலைவராக இருந்தேன். வந்திருக்கும் மனுக்களை பரிசீலனை செய்ய இந்திய தேசிய ராணுவத்தில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் படையில் இருந்த பி.கே.சேர்வை என்ற 90 வயது பெரியவர் எங்கள் அலுவலகத்துக்கு வந்தார். வெள்ளையனுக்கு எதிராகப் போர்க்களத்தில் நின்று போராடிய மகத்தான மனிதர் அவர்.

அவரை நானே வாசலுக்கு சென்று வரவேற்று உள்ளே அழைத்து வந்தேன். எங்களுக்கு வந்திருந்த மனுக்களை நாங்கள் கவனமாகப் படித்து பரிசீலனை செய்தோம். அதில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு உடன்டியாக தியாகிகளுக்கு உரிய பென்ஷன் கிடைக்கவும் ஏற்பாடுகளைச் செய்தேன். கிட்டத்தட்ட நான்கு மணி நேரம் எங்களுடன் இருந்தார். மதியம் அவர் கிளம் போது, 'ஐயா நீங்கள் எங்கே போக வேண்டும்?' என்று கேட்டேன். அவர் போக வேண்டிய இடத்தைச் சொன்னார். 'எப்படிப் போவீர்கள்?' என்று கேட்டேன். 'பஸ் பிடித்துச் செல்வேன்' என்று

சொன்னார். எனக்கு மனம் கேட்கவில்லை. ‘ஐயா என்னுடைய காரில் உங்களை கொண்டுபோய் விடச் சொல்கிறேன்’ என்று சொன்னேன். அதற்கு அவர், ‘உங்களுக்குச் சிரமம் வேண்டாம், என்று தவிர்த்தார். ‘இதில் ஒரு சிரமமும் இல்லை ஐயா. இன்று சுதந்திரத்தின் பலனை அனுபவிக்கிறோம்... உயர்வான அரசுப் பணியில் இருக்கிறோம் என்றால் அதற்குக் காரணம் உங்களைப் போன்றவர்களின் மகத்தான தியாகம்தான்! தயவு செய்து நீங்கள் இதை மறுக்காதீர்கள். இது எங்கள் கடமை’ என்று சொல்லி என் டிரைவரை வரச் சொல்லி அந்த சுதந்திரப் போராட்டத் தியாகியை அரசாங்கத்தின் காரில் சிவப் விளக்கைச் சுழல விட்டு அவரது வீட்டில் இறக்கிவிட்டு வரச் சொன்னேன். எத்தனையோ பேர் சிவப் விளக்கு வைத்த காரில் செல்லும்போது இவரைப் போன்ற தியாகிகள் அந்த காரில் செல்வதுதான் அவர்களுக்கு நாம் செய்யும் மரியாதையாக இருக்கும் என்பது என் எண்ணம்” என்று நெகிழ்கிறார் சகாயம்.

நம் நாட்டு சுதந்திரத்துக்காக உழைத்த ஒரு தியாகிக்கு... வயதில் முதிர்ந்த பெரியவருக்கு உதவுவதைவிட ஒரு நல்ல அலுவலருக்கு என்ன மகிழ்ச்சி கிடைக்கும்?

# தமிழ் வளர்க்கும் அரசுப் பள்ளிகள்!

விகடனில், 'இன்று... ஒன்று... நன்று!' என்ற பகுதியில் பல முறை பேசியிருக்கிறார் சகாயம். அவரது பேச்சில் அனல் தெறிக்கும். அத்தனையிலும் சமூக அக்கறை இருக்கும். எனக்குப் பிடித்த அவரது உரையிலிருந்து சில பகுதிகளைப் பகிர்ந்து கொள்கிறேன்.

"நம்முடைய நாட்டில் மிகப் பெரிய சவாலாக, அச்சுறுத்த லாக உருவெடுத்து நிற்பது லஞ்சம். அரசு நிர்வாகத்தின் அச்சாணியாக இருக்கக்கூடிய அரசு ஊழியர்கள் நேர்மை யாக இருந்தால் லஞ்சத்தின் வீச்சை பெருமளவு குறைத்துவிட முடியும். ஆனால், இன்று அரசு ஊழியர்களில் நேர்மையான கம்பீரமானத் தோற்றத்துடன் இருக்கும் மனிதர்கள் ஆங்காங்கேதான் இருக்கிறார்கள். பெருமளவுக்கு லஞ்ச லாவண்யத்தில் ஈடுபவர்களைத்தான் பார்க்க முடிகிறது.

ஒருகாலத்தில் குடும்பத்தின் அடிப்படைத் தேவைக்காக லஞ்சம் வாங்கிய நிலை மாறி, இன்று அரசு ஊழியர்களில் கணிசமானவர்கள் லஞ்சத்தைத் தங்களது ஆடம்பர வீண்செலவுக்குப் பயன்படுத்தும் அவல நிலை இருக்கிறது. வணிகத்தைத் தொடங்க அனுமதி பெற, உரிமம் பெற லஞ்சம் வாங்கிய காலமெல்லாம் போய் சாதாரண கிராமத்து விவசாயி பட்டா பெறுவதற்குக்கூட லஞ்சம் கொடுக்க வேண்டிய நிலை. அரசாங்கத்தின் மக்கள் நலத் திட்டங்களை வாங்குவதற்குக்கூட பயனாளிகள் லஞ்சம் கொடுக்க வேண்டிய அவல நிலைதான் உருவாகியிருக்கிறது. இப்படிப்பட்ட நிலை மாற்றப்பட வேண்டும்.

அடிப்படையில் ஊழல் என்பது மானுட பண்பாட்டுக்கு மாறானது. நாட்டின் வளர்ச்சிக்குத் தடையானது. ஊழல், லஞ்சம் இல்லாத சூழலுக்கு சூளுரைப்பது அவசியமானது. எப்படி இந்த ஊழலையும், லஞ்சத்தையும் அகற்ற முடியும் என்ற கேள்வி உங்கள் ஒவ்வொருவருக்குள் எழும்.



அந்த மாற்றம் நம் ஒவ்வொருவரிடமும் தொடங்க வேண்டும். மாணவர்கள், ஆசிரியர்கள், கலைத் துறையினர், அரசியல் பிரமுகர்கள் என்று ஒவ்வொருவரிடமும் ஊழலுக்கும் லஞ்சத்துக்கும் எதிரான எண்ணங்களை விதைக்க வேண்டும். வெறும் எண்ணம் மட்டுமே மாற்றத்தைக் கொண்டுவருமா... என்றால் உடனே வராது. ஆனால், நாளாக நாளாக வரும். லஞ்சம் வாங்குபவர்களைக் குற்றவாளியாகப் பார்க்கும் மன நிலை உருவாகிட வேண்டும். சட்டத்துக்கு உட்பட்டு தண்டனை வாங்கித் தரும் தைரியம் ஒவ்வொரு குடிமகனுக்கும் வர வேண்டும். அப்போதுதான் லஞ்சம், ஊழல் இல்லாத நாட்டை நாம் உருவாக்க முடியும். லஞ்சம் என்ற விஷ விருட்சத்தை வேரோடு சாய்க்க நாம் ஊரோடு போராடுவோம்.



நான் மதுரையில் கலெக்டராக இருந்தபோது, அங்குள்ள ஒரு பள்ளியில் என் மகள் யாழினி படித்துக்கொண்டிருந்தாள். ஒரு நாள் அவள் என்னிடம், 'அப்பா நீங்கள் மிகவும் நல்லவர்' என்று என்னுடன் படிக்கும் பிள்ளைகள் சொன்னார்கள் என்றாள். மாவட்ட ஆட்சித் தலைவராக என்னுடைய பணி அவர்களுக்குத் தெரியாது. அப்படி இருக்க... எப்படி என்னை அவர்கள் அப்படிச் சொன்னார்கள் என்று கேட்டேன். அதற்கு யாழினி, 'சிறிய மழை பெய்தால்கூட நீங்கள் விடுமுறை அறிவித்துவிடுகிறீர்களாம். அதனால் நீங்கள் நல்லவர் என்று என் தோழிகள் சொன்னார்கள்' என்றாள். இது எதைக் காட்டுகிறது என்றால் நம் மாணவர்கள் பள்ளியைவிட்டு வெளியில் செல்வதை மகிழ்ச்சியான தருணமாக நினைக்கிறார்கள். அப்படியானால் நம் பள்ளிச் சாலைகள் எல்லாம் இன்று சிறைச்சாலையாக இருப்பதாகவே நான் உணர்கிறேன்.

குதூகலம் மாறாமல் மகிழ்ந்து நம் குழந்தைகள் கல்வி கற்கும் இடமாக பள்ளிகள் மாற வேண்டும். நாமக்கல்லில் சில பள்ளிகள் படிப்பைத் தவிர வேறு எந்த விஷயங்களிலும் மாணவர்களை ஈடுபடுத்துவது இல்லை. அங்கு மட்டும் இல்லை... இன்று தமிழகத்தின் பல பகுதிகளில் உள்ள பள்ளிகளில் இதுதான் நிலை. மாணவர்களை படிப்பைத் தவிர வேறு எந்த விஷயத்திலும் ஈடுபடுத்துவது இல்லை. விளையாட்டு, பேச்சாற்றல், கவிதை கட்டுரைகள் எழுதுவது, ஓவியம் வரைவது என்று பாடத்துக்கு அப்பாற்பட்டு எவ்வளவோ விஷயங்கள் இருக்கின்றன. இது எதிலும்

அவர்களை ஈடுபடுத்தாமல் படிப்பைத் தவிர வேறு எதையும் அவர்களுக்குச் சொல்லிக்கொடுக்காமல் குழந்தைகளின் குதூகலச் சூழலை அழித்துவிடுகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையால்தான் இந்த சமுதாயத்தைப் பற்றிய அக்கறை இல்லாமல், இந்த நாட்டைப் பற்றிய சிந்தனை இல்லாமல் அவர்கள் வளர்கிறார்கள். இத்தகைய இயந்திர மனிதர்களை உருவாக்குவதற்குப் பள்ளிகள் அல்ல... இதயம் உள்ள மனிதர்களை உருவாக்குவதற்குதான் நம் கல்விச்சாலைகள் இருக்கின்றன.

குழந்தைகளின் உளவியலைப் ரிந்துகொண்டு அவர்களுக்குக் கற்பிக்கும் சூழலைப் பள்ளிகள் உருவாக்க வேண்டும். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் மருத்துவராக வேண்டும், பொறியாளர் ஆக வேண்டும். கலெக்டர் ஆக வேண்டும் என்று ஆசைப்படலாம். என்னுடைய வேண்டுகோள் எல்லாம் பெற்றோர்களே உங்கள் குழந்தைகள் மருத்துவராகட்டும், பொறியாளராகட்டும், கலெக்டராகட்டும் கொஞ்சம், கூடவே நல்ல மனிதராகவும் ஆகட்டும். அதற்குப் பெற்றோர்கள் பள்ளிகள் இரண்டும் இணைந்து செயல் பட்டால்தான் முடியும்.

நம் தேசத்தில் மூன்றில் ஒரு பங்கு காடுகளாக இருக்க வேண்டும். ஆனால், காடு அழிக்கப்படுகிறது. மலை சுரண்டப் படுகிறது. இயற்கை வளங்கள் சூரையாடப்படுன்றன. இன்றைக்கு உலகம் வெப்பமயமாகும் சூழலுக்கு இதெல்லாம் அழிக்கப்படுவதுதானே காரணம். மரம் நட வேண்டும் என்ற எண்ணத்தை குழந்தைகளுக்குப் பள்ளிப் பருவத்திலிருந்தே சொல்லிக்கொடுக்க வேண்டும். நான் நாமக்கல் ஆட்சியராக இருந்த சமயத்தில் 18 லட்சம் மரக் கன்றுகளை நட்டிருக்கிறேன். அதை எல்லாம் பள்ளிக் குழந்தைகளைக் கொண்டே நட்டேன் என்பதுதான் பெருமைக்கு உரியது. மனிதனுக்கு ஞானத்தையும் விஞ்ஞானத்தையும் அளிக்கக்கூடியது மரம் மட்டுமே. த்தனுக்கு போதி மரம் என்றால், நியூட்டனுக்கு ஆப்பிள் மரம். எங்கெல்லாம் காலி இடங்கள் இருக் கின்றனவோ அங்கெல்லாம் மரங்கள் நட வேண்டும். இயற்கையை நேசிக்கும் ஒவ்வொருவரும் உயர்ந்த மனிதரே!




அரசுப் பள்ளிகள்தான் ஏழைக் குழந்தைகளின் கடைசி நம்பிக்கை. அரசுப் பள்ளிக் குழந்தைகள்தான் எம் தமிழை அடுத்தத் தலைமுறைக்கு எடுத்துச் செல்கிறார்கள். மிக ஆழமாக யோசித்துப் பார்த்தால் எம் தமிழை இந்தக் குழந்தைகள்தான் வளர்க்கிறார்கள். எந்தத் தலைவரும் தமிழை வளர்க்கவில்லை. எந்தக் கவிஞரும் தமிழை வளர்க்கவில்லை. தமிழாசிரியர்களே வளர்க்காத தமிழை இந்த அரசுப் பள்ளியில் படிக்கும் ஏழைக் குழந்தைகள்தான் செய்கிறார்கள். அடுத்தத் தலைமுறைக்கு எம் தமிழை எடுத்துச் செல்வதும் அரசுப் பள்ளி குழந்தைகள்தான்.

அடிக்கடி அரசுப் பள்ளிக்குச் செல்வது என் வழக்கம். அரசுப் பள்ளியில் படிக்கும் மாணவர்களிடம் ஆர்வம் இருக்கிறது; ஆற்றல் இருக்கிறது. அவர்களை நாம் ஊக்கப் படுத்த வேண்டும். வழிகாட்ட வேண்டும். உங்களுக்கு நேரம் கிடைக்கும்போது அரசுப் பள்ளிகளுக்குச் செல்லுங்கள். அங்குள்ள மாணவர்களுக்கு உங்களால் முடிந்த உதவிகளைச் செய்யுங்கள். அவர்களும் மற்ற பிள்ளைகள் போல சமுதாயத்திலும், வாழ்க்கையிலும் முன்னேறட்டும்" என்று கோரிக்கை வைக்கிறார்.

அரசுப் பள்ளியில் படித்துதானே இன்று இளைஞர்களின்

வழிகாட்டியாக... ரோல் மாடலாக... மகத்துவமான மனிதராகத் திகழ்கிறார் சகாயம்.

@tamilbooksworld

# நீங்களும் ஐ.ஏ.எஸ். ஆகலாம்!

''நானும் உங்களைப்போல ஐ.ஏ.எஸ். ஆக என்ன செய்ய வேண்டும்?'' - இளைஞர்கள், மாணவர்கள் என்று இந்தப் த்தகத்தைப் படிக்கும் பலரது மனதிலும் சகாயத்திடம் கேட்க வேண்டும் என்ற இந்தக் கேள்வி எழும் ம். அதற்கு சகாயம் காட்டும் வழி இதுதான்!

''நாம் எங்கு வேண்டுமானாலும் படித்திருக்கலாம். ஆங்கிலப் பள்ளியில் நகரத்தில் படித்தவர்கள்தான் ஐ.ஏ.எஸ். ஆக முடியும் என்று நினைக்க வேண்டாம். நான் சாதாரண குக்கிராமத்தில் அரசுப் பள்ளியில் படித்த மாணவன்.

ஐ.ஏ.எஸ். (சிவில் சர்வீஸ்) தேர்வுக்காக எதைப் படிக்கப் போகிறோம் என்பதில் தெளிவாக இருங்கள். முதல் நிலைத் தேர்வு, முக்கியத் தேர்வில் எத்தனைத் தாள்கள் உண்டு. எந்தெந்த நூல்கள் வேண்டும், தயாரிப் க்கு எத்தனை நாட்கள் வேண்டும் என்று தெளிவாகத் திட்டமிடுங்கள். நீங்கள் விரும்பிப் படித்த பாடங்கள் பல இருக்கலாம். இந்தத் தேர்வுக்கு எதை விருப்பப் பாடமாகப் படிக்கப்போகிறோம் என்பதில் தெளிவு இருக்க வேண்டும். பொதுவாக நமக்கு அறிவு உண்டு. பொது அறிவு என நமக்கு எது உண்டு என்பதை நாம் அறிந்திட வேண்டும். தலைநகர் டெல்லியில் செங்கோட்டை எங்கு உண்டு, குதுப்மினார் எங்கே இருக்கிறது என உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். அதே சமயம், இந்தத் தேர்வுக்கு வழிகாட்ட தரமான பயிற்சி நிலையம் தலைநகரில் எங்கு உண்டு (சென்னையிலும் உங்கள் ஊரிலும்) என்று தெரிந்திருப்பதும் அவசியம். நேர்முகத் தேர்வுக்குச் செல்கிற போது ஆள் பிடிக்க முடியுமா என்று பார்க்க வேண்டியது இல்லை. நம் ஆளுமை பிறருக்குப் பிடிக்க என்ன செய்ய வேண்டும் என்று முயற்சிக்கலாம்.

தீர்க்கமான இலக்கும், தெளிவாகத் திட்டமிடுதலும், கண் துஞ்சாத படிப் ம், கடினமான உழைப் ம், காணும் கனவை

நனவாக்கும் திறமும் இருந்தால், எந்தப் பின்னணிகொண்ட இளைஞனுக்கும் ஐ.ஏ.எஸ். கனவு சாத்தியம்தான். கிராமங்களின் சிரமங்களில் இருந்து கிளம்பி வந்தாலும் சிகரத்தைத் தொட உங்களாலும் முடியும். ஆனால் ஒன்று, ஐ.ஏ.எஸ். என்பது இந்த தேசத்தின் அதிகார மையங்களின் உச்சாணிக் கொம்பில், உயர்ந்த பொறுப் க்களில் உங்களை உயர்த்துகின்ற கருவி. பொறுப் க்களில் நாம் உயர்வதற்கு வாய்ப் க்கள் ஏராளமாக உண்டு. பொருளாதாரத்தில் உயர்வதற்கு இது உயர்ந்த வாய்ப் என்று எண்ணி ஒருநாளும் எவரும் வர வேண்டாம்.

அன்பிற்கு உரிய இளைஞர்களே! நாட்டின் சேவைக்காக லட்சியக் கனவுகளோடு வாருங்கள். லஞ்ச எண்ணங்களோடு இங்கே வர வேண்டாம்!

பொது வாழ்வில் தூய்மையாக வாழ முடியும் என்பதற்கு எண்ணற்ற உதாரணங்களைச் சொல்ல முடியும். மதுரை பக்கம் வந்தால் மேலூரைத் தாண்டிச் செல்பவர்கள் மேன்மையோடு நிற்கும் ஒரு சிலையை தவறாது பார்க்க முடியும். அது பெருமகனார் கக்கனுடையது. பொதுவாழ்வில் நேர்மைக்கு இலக்கணமாகத் திகழ்ந்த அவர் மிகக் கொடூரமான சாதியக் கட்டமைப்பின் அடித்தளத்திலிருந்து வந்து கீர்த்தி பெற்றவர். அடக்கப்பட்ட சமூகத்தில் தோன்றிய சுக்கனுக்கு சிறப்பின் அடையாளமாக சிலை எழுப் கிறார்கள் என்றால், அது நேர்மைக்குக் கிடைத்த பரிசுதானே.

தனக்கென வாழாமல் மக்களுக்காக வாழ்ந்து மறைந்த ஒரு வெள்ளைக்காரனை நம் கிராமத்து மக்கள் தெய்வமாகக் கொண்டாடுகிறார்களே... சொந்த நாட்டிலேயே இன்னொரு பகுதி மக்களுக்கு தண்ணீர் தர மறுக்கும் கேடுகெட்ட சுயநலம் நிரம்பிய மனிதர்கள் மத்தியில் வெள்ளைக்காரன் தேசத்தில் பிறந்து பொறியாளராய் பணியாற்ற இந்த தேசத்திற்கு வந்தவன் கர்னல் ஜான் பென்னிகுக்.

பாதையே இல்லாத அடர்ந்த காட்டில், கொடிய மிருகங்கள் இடையேயும் நச்சு அரவங்களிடையேயும் அணை கட்டும் பணியை அயராது தொடர்ந்தவன். 18.06.1890-ல் கடுமையான பேய் மழையினால் அணைக்கட்டு பகுதியில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஆயிரக்கணக்கான மணல் மூட்டைகள் வெள்ளத்தால் அடித்து செல்லப்பட்ட காட்சியைக் கண்டு கண்ணீர்விட்டு கதறி அழுதவன்.

1893-ல் இந்தப் பகுதியில் ஏற்பட்ட காலாராவினால்

ஆயிரக்கணக்கான உயிர்கள் பலியாயின. அதில் பென்னி குக் உடன் பணியாற்றிய 45 ஆங்கில உயர் அதிகாரிகளும் இறந்துவிட்டனர். இறப் ம், இழப் ம் தொடர்ந்து தொல்லை கொடுத்த போதும், அணை கட்டும் பணியில் அயராது ஈடுபட்டவன். ஆங்கில அரசு பெரியார் அணைக்கட்டை ஒரு நேரத்தில் கட்ட முடியாதென்று கைவிட்ட நேரத்திலும், தொடர்ந்து பணி செய்து அணையைக் கட்டிட உறுதி கொண்டவன்.

நிதி இல்லாதபோது லண்டனிலுள்ள தன் சொத்து, நகைகளை விற்று நிதி கொண்டு வந்து அணையைக் கட்டி தென் தமிழகத்துக்கு பாசனம் கொடுத்துப் பசி போக்கியவன். இன்று தென் தமிழகத்து மக்கள் பாசனம் பெற்று பசியாறுவது மட்டுமல்ல, தவித்த வாய்க்குத் தண்ணீர் அருந்துவதும் இந்தத் தவப் தல்வனின் தியாகத்தால்தான்.

தியாகம் குறைந்து அருவருக்கத் தகுந்த சுயநலமும், பேராசையும் நிரம்பிப்போன நம் தேசத்தில் எங்கிருந்தோ வந்து நமக்கு வாழ்வளித்த இந்த மனித னிதனைப் பெருமைப் படுத்தி தமிழக அரசு மணிமண்டபம் எழுப்பியுள்ளது.

இவரது நாட்குறிப்பில் எழுதப்பட்டதாக குறிப்பிட்ட வாசகம் என்னைப் பெரிதும் ஈர்த்தது. 'இப் வியில் நான் வந்து செல்வது ஒரு முறைதான். எனவே, நான் இங்கே ஒரு நற்செயல் ரிந்திட வேண்டும். இதைத் தள்ளி வைப்பதற்கோ, தவிர்ப்பதற்கோ இடமில்லை. ஏனெனில், மீண்டும் ஒரு முறை நான் இப் வியில் வரப்போவதில்லை' - பென்னிகுக் சொன்ன வாசகம் அவருக்கு மட்டுமல்ல.. நமக்கும் பொருந்தும்தானே!




அதனால் இந்தச் சமூகத்துக்கு உங்களால் நேர்மையுடன் பங்களிக்க முடியும் என்ற நம்பிக்கையுடன் தயாராகுங்கள். நிச்சயம் நீங்களும் ஐ.ஏ.எஸ். ஆகலாம். பென்னிகுக் சொன்னது போல வாழ்க்கை என்பது ஒருமுறைதான். அதை அர்த்தமுள்ளதாக்கிக் கொள்ளுங்கள்!"என்று சொல்கிறார் சகாயம்.




உயர உயரப் பற... வானம் ஒருநாள் வசமாகும் - இது சகாயம் தன் குழந்தைகளுக்கு அடிக்கடிச் சொல்லி வளர்க்கும் வரிகள். நண்பர்களே... இது சகாயத்தின் குழந்தைகளுக்கு மட்டுமல்ல... எல்லாக் குழந்தைகளுக்குமே சொல்லி வளர்க்க வேண்டிய வரிகள்தான்!

# தலைமுறை கடந்த வருத்தம்!

நம் தாய்மொழியான தமிழ் மொழி மீது சகாயத்துக்கு அளவில்லாத அன் ம் அக்கறையும் உண்டு. அதைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் அவரது பேச்சில் நான் கவனித்து இருக்கிறேன்.

''உலகில் மூத்த மொழி மட்டுமல்ல... சொல்லில் வளமான மொழி நம் தமிழ் மொழி. அத்தகைய தமிழைப் பேசும்போது அதிகமாக ஆங்கில வார்த்தை கலந்துபேசுகின்ற அவலம் தமிழர்களிடம் அதிகம். ஆங்கிலத்தைப் பேசும்போது எப்படி தமிழைக் கலந்துபேசுவது அபத்தமோ அதேபோல தமிழைப் பேசும்போது ஆங்கிலத்தைக் கலந்து பேசுவதும் அபத்தம்தான். அது ஆபத்தும்கூட. இந்த மொழிச் சிதைவை உண்டாக்கு பவர்கள் மெத்தப் படித்தவர்கள் மட்டும்தான் என்ற நிலை மாறி இன்று படிக்காத பாமரர்கள்கூட தமிழ் பேசும்போது ஆங்கிலம் கலந்து பேசும் கலாசாரத்துக்கு மாறியுள்ளனர்.

நான் மதுரையில் ஆட்சியராகப் பணியாற்றியபோது மக்கள் குறை தீர்க்கும் கூட்டத்தை ஆட்சியர் அலுவலகத்தில் நடத்துவதற்குப் பதிலாக கிராமங்களுக்கே சென்று நடத்த முடிவெடுத்தேன். கருமாத்தூர் என்ற ஊரில் நடத்தினோம். அதிகாரிகள் என்னுடன் வந்தனர். அந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்களும், அக்கம்பக்க ஊர்களைச் சேர்ந்தவர்களும் தங்கள் பிரச்னைகளுக்காக மனு கொடுத்தனர். முதியோர் உதவித் தொகை கேட்டுக் கொடுக்கப்பட்ட மனுக்கள்தான் அதிகம் இருந்தது. அங்கு வந்த பாட்டிகள் பலரும், 'எப்படியாவது ஓ.ஏ. பணம் வாங்கிக்கொடுங்க சாமி...' என்றனர். எனக்குப் ரியவில்லை. அருகில் இருந்த தாசில்தாரிடம் அது என்ன ஓ.ஏ. பணம் என்றேன். அதற்கு அவர், 'ஓல்டு ஏஜ் பென்ஷன் என்பதைச் சுருக்கி ஓ.ஏ.பி. என்று சொல்வார்கள். அதைத்தான் இந்த பாட்டிகள் ஓ.ஏ. பணம் என்கிறார்கள்' என்று சொன்னார். தமிழ்நாட்டில் ஆங்கில மோகம் ஆயாக்கள் வரை சென்றுவிட்டதை எண்ணி வேதனைப்பட்டேன்.



தமிழ்நாட்டில் தமிழக அரசால் தமிழ் மக்கள் வரிப் பணத்தில் செயல்படுத்தப்படும் திட்ட உதவிகளின் வழியாக ஆங்கில மோகம் வளரக் கூடாது. இதற்கு உடனடியாக எதாவது செய்ய வேண்டும் என நினைத்தேன். அங்கே உதவித் தொகை கேட்டு மனு கொடுத்திருந்த பாட்டிகளை எல்லாம் அழைத்தேன். 'நீங்கள் எவ்வளவு நாளாக உதவித் தொகை கேட்டு மனு கொடுத்திருக்கிறீர்கள்?' என்று கேட்டேன். அதற்கு, இரண்டு வருடம், மூன்று வருடம் என ஒவ்வொருவரும் ஒரு பதில் சொன்னார்கள். நீங்கள் ஓ.ஏ. பணம் கொடுங்கள் என ஆங்கிலத்தில் கேட்டதால்தான் தாமதமாகி இருக்கும். இனி ஓ.ஏ. பணம் கொடுங்கள் என்று கேட்காமல் ஆயா பணம் கொடுங்கள் என்று தமிழில் கேளுங்கள். நிச்சயம் உங்களுக்கு பணம் கிடைக்கும் என்று உறுதி அளித்தேன்.

வந்திருந்த அத்தனை பாட்டிகளும், ஆயா பணம் கொடுங்கள் என்று கேட்டனர். அவர்களுக்குத் தகுதியின் அடிப்படையில் உடனடியாக ஆயா பணம் வழங்க உத்தரவு இட்டேன். அந்தக் கூட்டத்தில் இருந்த முதியவர் ஒருவர், 'நாங்க ஆம்பளைங்க... எப்படி ஆயா பணம் கொடுங்கன்னு கேட்குறது?' என்று கேள்வி எழுப்பினார். அவரிடம், நீங்கள் ஐயா பணம் கொடுங்கன்னு

கேளுங்க என்றேன். அவரும் அப்படியே கேட்டார். அவருக்கும் உடனடியாக ஐயா பணம் கொடுக்க உத்தரவு இட்டேன். இந்த விஷயம் மதுரை மாவட்டம் முழுக்கப் பரவியது.

'நாம இங்கிலீஷ்ல கேட்டதாலதான் இவ்வளவு நாளா நமக்கு பணம் கிடைக்காம இருந்திருக்கு. இனி தமிழ்ல கேட்போம்...' என்று வயதானவர்கள் பேச ஆரம்பித்தனர். 'ஆயா பணம், ஐயா பணம்' என்ற வார்த்தை மதுரை மாவட்டத்தில் பழக்கத்துக்கு வந்துவிட்டது. இப்படி நம்மால் முடிந்தவரை தமிழை வளர்ப்பதுதானே நாம் தமிழுக்கு செய்யும் நன்றியாக இருக்கும்.

நான் ஐ.ஏ.எஸ். முக்கிய தேர்வில் தேர்ச்சிபெற்றதும் நேர்காணல் தேர்வுக்காக டெல்லி சென்றிருந்தேன். நேர்காணல் நடந்த அறையில் பல அதிகாரிகள் இருந்தனர். மகாராஷ்டிராவைச் சேர்ந்த ஓர் அதிகாரி என்னிடம், 'தமிழக மாணவர்கள் ஏன் ஹிந்திக்கு எதிராகப் போராடுகிறீர்கள்?' என்று கேட்டார். அதற்கு நான், 'நாங்கள் ஹிந்தி மட்டுமல்ல... எந்த மொழிக்கும் எதிரானவர்கள் இல்லை. ஹிந்தி எங்கள் மீது திணிக்கப்படும்போதுதான் அதற்கு எதிராகப் போராடும் சூழ்நிலைக்கு நாங்கள் தள்ளப்படுகிறோம்' என்று சொன்னேன்.



அடுத்து ஓர் அதிகாரி, 'இந்தியாவின் ஆட்சி மொழியாக எதை வைக்கலாம்?' என்று கேட்டார்.

உலகிலேயே மூத்தமொழி. இலக்கிய இலக்கண பெருமைவாய்ந்த மொழி என்றால் அது தமிழ் மொழிதான். அதனால் தமிழை இந்தியாவின் ஆட்சி மொழியாக வைக்கலாம் என்று சற்றும் யோசிக்காமல் சொல்லிவிட்டு வந்தேன்.

அன்று டெல்லிக்கு என்னுடன் தமிழகத்தைச் சேர்ந்த ராஜாமணி என்ற நண்பரும் நேர்காணலுக்கு வந்திருந்தார். நேர்காணல் முடிந்து நாங்கள் இருவரும் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது நான் இந்தியாவின் ஆட்சி மொழியாக தமிழை வைக்க வேண்டும் என்று சொன்னதை அவருடன் பகிர்ந்துகொண்டேன். அதற்கு ராஜாமணி, 'உன் தமிழ்ப் பற்றைக் காட்டுவதற்கு இதுவா இடம்... லட்சியத்தைப் பற்றிப் பேசாமல் ஐ.ஏ.எஸ். வாங்கிக்கொண்டு போகவேண்டியதுதானே! ஏன் கெடுத்துக்கொள்கிறாய்' என்று சொன்னார்.

அதைப்பற்றி எனக்கு கவலை இல்லை. தமிழா... ஐ.ஏ.எஸ்-ஸா என்று வந்தால் எனக்கு என் தமிழ்தான் முக்கியம் என்று சொல்லிவிடுவேன் என்று அப்போது அவரிடம் சொன்னேன். அந்த சிந்தனை இன்றும் எனக்குள் இருக்கிறது.

நான் சாதி, மத, இன கோடுகளுக்குள் குறுகிவிடாமல் அதற்கு அப்பாற்பட்டு மானுடத்தை, மனித குலத்தை நேசிக்கப் பக்குவப்படுத்திக்கொண்டவன். பண்பட்டு நின்றவன். இருப்பினும், எம் தமிழ் சமூகத்தின் பெருமை மிகுந்த அடையாளங்களான தமிழ் மொழியின் மீதும், தொன்மை வாய்ந்த அதன் உயர்ந்த மர களின் மீதும், எல்லையில்லா பற்று கொண்டவன்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கணியன் பூங்குன்றனாரின் வார்த்தைகளில், எம் தமிழ் சமூகம் உலகில் எல்லா மக்களையும் உறவினர்களாகக் கருதிய ஒப்பற்ற சமூகம் என்று உயர்ந்து நின்று நான் பெருமைப்பட்டேன்.

குளிரால் வாடிய மயிலுக்கு போர்வை போர்த்தினான் பேகன். இதிலிருந்து எம் சமூகம் உலகின் எல்லா ஜீவராசி களையும், நேசித்த நிகரற்ற சமூகம் என்று நிமிர்ந்து நின்று இறுமாப் கொண்டேன்.

முல்லைக்குத் தேர் கொடுத்தான் வள்ளல் பாரி என்ற கதையிலிருந்தும், வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம்

வாடினேன் என்ற வள்ளலார் பெருமானின் கருத்திலிருந்தும், எம் சமூகம் செடி கொடிகளைக்கூட நேசிக்கும் செம்மையான சமூகம் என்று சிலாகித்துக்கொண்டேன்.

இப்படி உலகின் எல்லா மனிதர்களையும் உறவினர்களாக உணர்ந்த, எல்லா ஜீவராசிகளையும் நேசித்து நின்ற, செடி கொடிகளைக்கூட காத்திடும் கடலளவு கருணை கொண்ட தாகத் திகழ்ந்தது தமிழ்ச் சமூகம்.

ஆனால், இந்த சமூகத்தின் வழித்தோன்றல்களான அரும் களாம், பிஞ்சுகளாம், பிற குழந்தைகளைப் போல பூவுலகில் வாழ பூரண உரிமை பெற்ற, ஒரு பாவமும் அறியாத வாழத் துடித்த குழந்தைகளையும், பெண்களையும் ஈழ மண்ணில் முள்ளி வாய்க்காலில் கொன்றழித்த பேரவலத்தை கண்ணுக்கெட்டிய தூரத்தில் நின்று கண்டபோது ஒரு தமிழனாகப் பிறந்ததற்காக வருத்தம் மட்டுமல்ல பாட்டுக்கொரு லவன் பாரதி நொந்து சொன்னதைப் போல...

விதியே, விதியே, தமிழச் சாதியை

என்செய நினைத்தாய் எனக்குரை யாயோ?

என்று வேதனையின் விளிம் க்கே சென்றேன். மனசாட்சியுள்ள எந்த மனிதனுக்கும் ஏற்படும் அந்த இனம் ரியாத வருத்தமும், வலியும் எனக்கு மட்டுமல்ல என் தலைமுறைக்கும் இருக்கும் என்பதே உண்மை" என்கிறார் சகாயம்.

சாதாரண ஒரு மனிதனால் இப்படி யோசிக்கவும் முடியாது. தமிழை நேசிக்கவும் முடியாது!

16

# பதவியும் உதவியும்!

சென்னையில் மாவட்ட வருவாய் அலுவலராக சகாயம் இருந்த சமயத்தில், கிண்டி - மாம்பலம் பகுதியில் வீட்டு வசதி வாரியத்துக்குச் சொந்தமான கோடிக்கணக்கான ரூபாய் மதிப் ள்ள நிலத்தைத் தனியார் ஒருவர் ஆக்கிரமிப் செய்திருப்பதாகவும், அந்த இடத்துக்கு பட்டாவும் வாங்கிவிட்டார் என்றும் சகாயத்துக்குப் கார் வந்தது.

விசாரணையில் இறங்கினார் சகாயம். அரசு நிலத்தை தனியார் ஒருவர் ஆக்கிரமித்து பில்டிங் எழுப்பவும் ஆரம்பித்திருந்தார். விசாரணையில் முறைகேடு நடந்திருப்பது உறுதியானது. அவர்கள் மீது சகாயம் நடவடிக்கை எடுக்க உத்தரவு தயாரித்தார். நிலத்தை ஆக்கிரமித்த நபர் பவர்ஃ ல் மனிதர். சகாயத்திடம் நேரடியாக டீல் பேசினார். நெருப்பைத் தொட்டுப்பார்க்க நினைத்தால் என்ன ஆகும்? கொந்தளித்தார் சகாயம். அந்த பவர்ஃ ல் மனிதரோ தன் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி அன்று மாலையே சகாயத்தை அந்தத் துறையில் இருந்து வேறு இடத்துக்கு மாற்றிவிட்டார்.

மாற்றல் உத்தரவைப் பெற்றுக்கொண்டு அங்கிருந்து விடைபெறுவதற்கு ஒரு நாள் கால அவகாசம் கொடுக்கப் பட்டிருந்தது. தன்னிடம் இருந்த அத்தனை ஆவணங்களையும் வைத்து விடிய விடிய தூங்காமல் ஒரு உத்தரவை தயாரித்தார். சம்பந்தப்பட்ட அந்த நபர் அரசு நிலத்தை ஆக்கிரமித்து இருக்கிறார். அவர் மீது நடவடிக்கை எடுத்து அந்த நிலத்தை மீட்க வேண்டும் என்பதுடன், அந்த பட்டாவையும் ரத்து செய்து உத்தரவு இட்டார். உத்தரவின் நகலை அரசுக்கும், சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கும் தன் உத்தரவை அனுப்பிவிட்டு அங்கிருந்து விடைபெற்றார். அடுத்த சில நாட்களில் ஆக்கிரமிக்கப்பட்ட அரசு நிலம் மீட்கப்பட்டது.



காஞ்சி ரத்தில் சகாயம் மாவட்ட வருவாய் அலுவலராக இருந்த காலத்தில் நடந்த சம்பவம் இது.

அப்போது பார் நடத்துவதற்கு அரசு அனுமதி அளிக்க வில்லை. தாம்பரம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் அனுமதி இல்லாமல் நிறைய பார்கள் நடந்துவந்தன. சகாயம் தன் உதவியாளர் ஒருவரை உடன் அழைத்துக்கொண்டு ஒரு கட்டையை எடுத்து காரில் போட்டுக்கொண்டு அடிக்கடி கிளம்பிவிடுவார். அனுமதி இல்லாமல் நடக்கும் பாரில் உள்ளே குந்து பார்ப்பார். பிறகு வெளியில் இருக்கும் தன் உதவியாளரிடம் கட்டையை எடுத்து வரச்சொல்லி பாரை அடித்து துவம்சம் செய்வார். அப்படி ஒருநாள் பாரை அடித்து நொறுக்கிவிட்டு சகாயம் காருக்குச் சென்றார். அவரோடு வந்த உதவியாளர் பாரில் இருந்த சிக்கனை சாப்பிட்டுவிட்டு வாயைத் துடைத்தபடி வந்தார்.

இதைப்பார்த்து அதிர்ந்துபோன சகாயம் உதவியாளரை அருகில் அழைத்தார். 'என்ன சாப்பிட்டீங்க...' என்று கேட்டார். உதவியாளர் தடுமாறினார். பிறகு சிக்கன் சாப்பிட்ட உண்மையை ஒப் க்கொண்டார். தன் உதவியாளரை காரில் ஏற்றாமல் அங்கிருந்து கிளம்பிவிட்டார். உதவியாளர் பஸ் பிடித்து அலுவலகம் சென்று சேர்ந்தார். அவர் உள்ளே நுழைந்தபோதே, அவரது கையில்

கொடுக்கச் சொல்லி ஒரு கவரைக் கொடுத்திருந்தார் சகாயம். அது அவரை அரசு பணியில் இருந்து விடுவிக்கப்பட்டதற்கான உத்தரவு. தன்னைச் சுற்றி இருப்பவர்களும் நேர்மையுடன் இருக்க வேண்டும் என்பதில் கவனமாக இருப்பார் சகாயம்.

சிவில் சப்ளை டெ டி கமிஷனராக சென்னையில் சகாயம் பணியாற்றிய காலம் அது. வீட்டுக்குப் பயன்படுத்தும் சிலிண்டர்களுக்கும், வெளியில் கமஷியலாகப் பயன்படுத்தும் சிலிண்டர்களுக்கும் நிறைய விலை வித்தியாசம் இருக்கும். அதனால், தனியார் நிறுவனங்களில் வீட்டு சிலிண்டர்களைப் பயன்படுத்துவது வாடிக்கையாக இருந்தது. இதனால் வீட்டு சிலிண்டருக்குத் தட்டுப்பாடு வந்தது.

சகாயத்தின் கவனத்துக்கு விஷயம் போனது. அதிகாரிகளை அழைத்துக்கொண்டு கடை கடையாக ஏறி இறங்கினார். வீடுகளில் பயன்படுத்தும் சமையல் சிலிண்டரை கமர்ஷியலாகப் பயன்படுத்தும் கடைக்காரர்களைப் பிடித்து ஃபைன் போட்டார். சிலிண்டர்களையும் பறிமுதல் செய்தார். சென்னையில் உள்ள சில பிரபல நட்சத்திர ஹோட்டல்களிலும் இதே போல வீட்டு சிலிண்டரைப் பயன்படுத்துவதை உறுதிசெய்துகொண்ட சகாயம் அங்கேயும் நேரடி ஆக்ஷனில் இறங்கினார்

'சென்னையில் பெரிய ஸ்டார் ஹோட்டல் தொடங்கி சாதாரண ஹோட்டல் வரை வீட்டு சிலிண்டரைப் பயன் படுத்துகிறார்கள். இதனால் பொதுமக்களுக்கு சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்படுகிறது. இதில் கோடிகளில் முறைகேடு நடந்துள்ளது. எனவே இதுகுறித்து சி.பி.ஐ. விசாரணை தேவை' என்று அரசுக்கு கடிதம் எழுதினார் சகாயம். கடிதம் அனுப்பிய சில நாட்களிலேயே சகாயம் அங்கிருந்து மாற்றப் பட்டார்.

"கலெக்டராக இருப்பதால் நீங்கள் மக்களுக்கு நிறைய உதவிகள் செய்கிறீர்கள். ஒருவேளை கலெக்டராக ஆகாமல் இருந்திருந்தாலும் மக்களுக்கு உதவிகளை செய்திருப்பீர்களா?" என்று கேட்டபோது சகாயம் என்ன சொன்னார் தெரியுமா?"

"மக்களுக்கு உதவி செய்வது என்பது என்னைப் பொறுத்த வரை பதவியினால் வந்தது அல்ல. அது என் உள்ளக்கிடக்கை. ஆழ்மனது அவா. எளியோருக்கும், றக்கணிக்கப் பட்டோருக்கும் பரிவு காட்டி உதவ வேண்டும் என்று என் ஆழ்மனதின் எண்ணத்தை கலெக்டராக இருந்துகொண்டு அரசின் திட்டங்களைக் நிறைவேற்றுவதன் மூலம் நிறைவு செய்கிறேன். இங்கே கலெக்டர்

பதவி உதவி செய்வதற்கான ஓர் உன்னத கருவி.

அரசு பதவிக்கு வந்தபோது நான் லட்சிய தாகம் நிறைந்த ஓர் இளைஞன். அன்று, ஒரு முழு, நேர்மையான அலுவலனாக திகழ வேண்டும் என்பதோடு, இந்த அமைப்பினையே நேர்மை பாதையில் கொண்டுசெல்ல வேண்டும் என்ற மூர்க்கத்தனம் எனக்கு இருந்தது. அநியாயங்களின் ஆணி வேரை அறுக்க வேண்டும் என்ற ஆவேசம். எள் முனை அளவும் என் லட்சிய தாகத்திலிருந்து விடுபடாது நேர்மையாக இன்று வரை பயணிக்கிறேன். அநியாயங்களுக்கு எதிரான என் ஆவேசமும் அப்படியே இருக்கிறது. என்னிடம் பணியாற்றும் சக ஊழியர்களையும் நேர்மையாகப் பணி யாற்றச் செய்திட வேண்டும் என்று முனைந்த என் முயற்சியில் முழு வெற்றியை நான் பெறவில்லை.

அதே நேரத்தில், நான் பெற்றிருக்கிற இந்த பதவியை - அதிகாரத்தை பயன்படுத்தி ஏழைகள் ஏற்றம் பெற உதவ வேண்டும். இந்த தேசத்தின் ஜீவனாக விளங்குகிற கிராமங் களின் முன்னேற்றத்துக்குப் பங்களிப் செய்ய வேண்டும் என்ற என் அடங்கா அவாவை ஓர் அலுவலர் என்ற முறையில் ஓரளவு நான் நிறைவேற்றி வந்திருக்கிறேன்.

கலெக்டர் பதவி இல்லாவிட்டாலும் என்னளவில் வாய்ப் க்கும் சூழலுக்கும் ஒப்ப முடிந்தது எதுவோ அதை மக்களுக்கு செய்து கொண்டுதான் இருந்திருப்பேன். நாமக்கல்லில் ஆதரவற்ற குழந்தைகளின் கல்விக்காக ஓர் இல்லத்தைத் தொடங்கினோம். அதை நடத்துவதற்கு ஒரு தொகையை, நான் உட்பட அரசு அலுவலர்கள் சிலர் மாதம் தோறும் சம்பளம் பெற்றபோது ஒதுக்கி நிர்வகித்து வந்தோம். நான் மாற்றலாகி வந்த பிறகும் அதைத் தொடர்ந்து நடத்திட, அலுவலர்கள் ஒதுங்கிக்கொண்டபோதும், நான் முயற்சிக் கிறேன். இன்றும் நாமக்கல்லில் உள்ள நல்ல உள்ளங்களின் உதவியோடு சிரமத்துக்கு இடையே அந்த இல்லத்தைத் தொடர்ந்து நடத்தி வருகிறோம்.

மக்களுக்கு உதவி என்பது பதவியோடு மட்டும் நின்று விடுவதில்லை. வாய்ப் கிடைக்கும் போதெல்லாம் செய்யத் தோன்றும் செம்மை எண்ணம் அது. உதவி என்பது எண்ணம் சம்பந்தப்பட்டது. பதவி சம்பந்தப்பட்டது அல்ல!" என்று சொல்லும்போது சகாயத்தின் வார்த்தைகளில் அப்படி ஒரு கம்பீரம்.

அது நேர்மையின் கம்பீரம்!

படங்கள் உதவி:
எம்.உசேன்
பொன்.காசிராஜன்
எம்.விஜயகுமார்
சண்.சரவணகுமார்
பா.காளிமுத்து
ரமேஷ் கந்தசாமி
அ.வின்சென்ட் பால்
எம்.திலீபன்
சி.நந்தகோபால்
மாதேஸ்வரன்
நா.சிபிச்சக்கரவத்தி

@tamilbooksworld

Printed Books



★ லஞ்சம், ஊழல்களின் முன்னேற்றத்துக்கு எதிரானது; நாட்டின் வளர்ச்சிக்கு கேட்டினைத் தருவது; மானுட பண்பாட்டுக்கு மாறானது. லஞ்சம் பெறுவது என்பது ஏதோ ஒரு பொருளாதார தேவையை பூர்த்தி செய்திடும் வழி என்று சிலர் கருதலாம். ஆனால், லஞ்சம் பெறக்கூடிய அரசு ஊழியர் ஒருவர் மிக அரிய மனித பண்பான சுயமரியாதையை, தன்மானத்தை இழக்கிறார்.

★ எந்த சூழ்நிலையிலும் யாருக்காகவும் உங்களது நேர்மையை விட்டுக்கொடுக்காதீர்கள். நிச்சயம் அந்த நேர்மை ஒருநாள் உங்களை உயர்ந்த இடத்துக்கு கொண்டு செல்லும். உங்களை நிச்சயம் அது காப்பாற்றும்.

★ நேர்மை என்பது உன்னதமான உயர்ந்த லட்சியம்; அது கடினமானதுதான்; அதை மனநிறைவோடு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

★ மக்களுக்கு செய்யும் உதவி என்பது பதவியோடு மட்டும் நின்றுவிடுவதில்லை. வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் செய்யத் தோன்றும் செம்மை எண்ணம் அது. உதவி என்பது எண்ணம் சம்பந்தப்பட்டது. பதவி சம்பந்தப்பட்டது அல்ல!

விகடன் பிரசுரம்

SAGAYAM SANTHITHA SAVALGAL

₹ 80

(1st Edition)

ISBN 978-81-8476-558-6